# திருமறை ஆசான்

மலர் 9 MAY இதழ் 5




வெளியிடுவோர்

காங்கயம் கிறிஸ்துவின் சபையார்
தாராபுரம் ரோடு, காங்கயம் - 638 701

நீங்கள் ஈரோட்டில் இருக்க நேர்ந்தால் கீழ்க்கண்ட நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு கர்த்தருடைய பிள்ளைகளோடு சேர்ந்து ஆராதியுங்கள்.

இடம் :- 2, மணல்மேடு வீதி, ஈரோடு - 638 002.
(ரயில் குட்செட் சமீபம்)

## நாளும் நடப்பும்

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு | காலை | 9.30 - 11.00 | காலை ஆராதனை |
| ஞாயிறு | பகல் | 11.00 - 12.00 | ஞாயிறு பள்ளி |
| ஞாயிறு | மாலை | 5.30 - 6.30 | திருமறை ஆய்வு & கலந்துரையாடல் |
| வியாழன் | மாலை | 7.15 - 8.30 | வேத ஆய்வுவகுப்புகள் |
| வெள்ளி | மாலை | 7.00 - 9.00 | ஜெப ஆராதனை |

## ஆசானின் அறிவுரையிலே


பக்கம்

1. "தேவனின் போர்ப்படை" 1
2. கொர்நேலியுவும் அவன் வீட்டாரும் பரிசுத்த ஆவியின் திருமுழுக்குப் பெற்றனர் 9
3. (பெண்கள் பகுதி) சபையில் பெண்களின் பங்கு 14
4. இயேசு கிறிஸ்துவின் வருகைகள் 16
5. கிறிஸ்து சந்தித்த சோதனைகள் 21
6. (யெகோவா சாட்சிகள் 4) கிறிஸ்துவின் தெய்வீகத்தை மறுதலிக்கும் கூட்டத்தார் 27
7. எந்த வழி? 30
8. கிறிஸ்துவின் சபை ஒரு பிரிவினைக் கூட்டமா? 32

# THIRUMARAI AASAAN

Editor
E.Z.S. RAJANAYAGAM

Honorary Editor
J.C. CHOATE

Published by Church of Christ
Dharapuram Road, KANGAYAM-638 701 Tamilnadu, India.
Pleading for the restoration of pure New Testament Christianity

Vol. 9 MAY Issue-5

## ஆசிரியவுரை

## "தேவனின் போர்ப்படை"

கிறிஸ்தவத்தை 'விசுவாச மார்க்கம்' என்றும், அன்பின் மார்க்கம் என்றும் அழைப்பதைப் போன்று, கிறிஸ்தவத்தைப் "போராட்ட மார்க்கம்" எனவும் அழைக்க முடியும். ஏனெனில், பரிசுத்த வேதாகமம், கிறிஸ்தவர்களைப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள போர் வீரர்களாக அநேக இடங்களில் சித்தரிக்கிறது. இக்கருத்துக்குப் பல வசன ஆதாரங்கள் உண்டு. "விசுவாசத்தின் நல்ல போராட்டத்தைப் போராடு..." (I தீமுத். 6:12), "நீயும் கிறிஸ்து இயேசுவுக்கு நல்ல போர்ச் சேவகனாய்த் தீங்கநுபவி" (II தீமுத். 2:3) "நல்ல போராட்டத்தைப் போராடினேன்..." (II தீமுத். 4:7) "ஏனெனில் மாம்சத்தோடும் இரத்தத் தோடுமல்ல, துரைத்தனங்களோடும், அதிகாரங்களோடும். இப்பிரபஞ்சத்தின் அந்தகார லோகாதிபதிகளோடும், வான மண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவிகளின் சேனைகளோடும் நமக்குப் போராட்டமுண்டு" (எபே. 6:12)

பழைய ஏற்பாட்டில், நியாயாதிபதிகளின் காலத்தில் இஸ்ரவேலர்களை மீதியானியர்கள் ஏழு ஆண்டுகள் ஒடுக்கி வைத்திருந்தனர். அந்நாட்களில் மீதியானியர் இஸ்ரவேலின் விளைச்சலைக் கெடுத்து, ஆடுமாடுகளைக் கொள்ளையிட்டு, இப்படிப் பல தொல்லைகள் கொடுத்து தேசத்தைக் கெடுத்து வந்தனர். (நியா. 6:3-5) கொடுமைகள் தாங்க முடியாமற் போகும் பொழுது மாத்திரம் கர்த்தரை நோக்கி முறையிடுவதென்பதையே வழக்கமாக்கிக் கொண்ட இஸ்ரவேலர், கர்த்தரை நோக்கி முறையிட்டனர். (6:7)

இந்நிலையில் இரக்கங்களின் தேவன், ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு ஆகிய நம் முற்பிதாக்களுக்குக் கொடுத்த வாக்கை நினைத்து, வேண்டுதலுக்குச் செவிமடுத்து ஒரு இரட்சகனை எழுப்பச் சித்தங் கொண்டார்.

ஆம், வயலில் விளைந்த கோதுமையை, மீதியானியரின் கைக்குத் தப்புவிப்பதற்காக, தனியாளாய் ஆலைக்குச் சமீபமாய் நின்று, போரடித்துக் கொண்டிருந்த நெஞ்சுரம் கொண்ட கிதியோனைச் சந்திக்க கர்த்தர் தம்முடைய தூதனை அனுப்பினார். (6:11)

ஆனால், கர்த்தருடைய தூதனாலேயே "பராக்கிரமசாலி" என்றழைக்கப்பட்ட கிதியோனோ, தூதனோடு வாதிடுகிறான் (6:13) தன்னுடைய இயலாமையை வெளிப்படுத்தினான். (6:15) பிறகு, ஒருவாறு சுதாரித்துக் கொண்டு அடையாளம் கேட்டான். (6:17) அடையாளம் காட்டப்பட்டபொழுது, புதிய நம்பிக்கையைப் பெற்றுக் கொண்டு கர்த்தருடைய வார்த்தைப்படியே, தன் தகப்பனுக்கிருந்த பாகாலின் பலிபீடத்தைத் தகர்த்தெறிந்தான். (6:25)

அடையாளத்தின் அடிப்படையில் புதிய நம்பிக்கையையும், பெலனையும் பெற்றுக் கொண்ட கிதியோன் எதிரிகளை எதிர்கொள்ள ஒரு படையைத் திரட்டுகிறான். (6:25) போர் முனைக்குச் செல்லும் முன்பாக தனது அழைப்பை மீண்டும் உறுதி செய்து கொள்ள விரும்பி, மேலும் இரண்டு அடையாளங்களைக் கேட்டான். அதையும் கர்த்தர் அவனுக்குக் காட்டினார். (6:36-40)

இப்பொழுது, தனது படைக்குத் தலைமையேற்று, கம்பீரமாக நடந்து, மீதியானியரை மேற்கொள்ள விசுவாசத்தோடு செல்கிறான். ஆனால், கர்த்தர் கிதியோனின் படையில் புகுந்துவிட்ட புல்லுருவிகளைக் களையெடுத்து, தனக்காகப் போராடும் போர்ப்படையின் எண்ணிக்கையை, வெகுவாகக் குறைத்து அனுப்பினார் (7:1-7) தொடர்ந்து வாசித்தால், நமது கர்த்தருக்கே உரித்தான வகையில் "பெரும் வெற்றி" கொடுக்கப்படுகிறது. (7:8-23)

அப்போஸ்தலன் பவுல், உரோமையருக்கு எழுதும் பொழுது இவ்விதமாகக் குறிப்பிடுகிறார். "தேசவசனத்தினால் உண்டாகும் பொறுமையினாலும், ஆறுதலினாலும் நாம் நம்பிக்கையுள்ளவர்களாகும்படிக்கு, முன்பு எழுதியிருக்கிறவைகளெல்லாம் நமக்குப் போதனையாக எழுதியிருக்கிறது" (ரோம. 15:4) ஆகையால், இங்கே தேவன், தமக்காகப்

போரிடும்படி தெரிந்துகொண்ட "தேவனின் போர்ப்படையின்" சில குணாதிசயங்களைப் பார்த்து, அதன் மூலம் சில பாடங்களைக் கற்றுக் கொள்வோம்.

## I. அவர்கள் எண்ணிக்கையில் குறைவானவர்களாகவே இருந்தனர்

பள்ளத்தாக்கிலே வெட்டுக்கிளிகளைப் போலத் திரளாய்ப் படுத்துகிடந்த, கடற்கரை மணலைப் போல ஏராளமாய் இருந்த மீதியானியரை எதிர்த்து, கிதியோனின் பட்டாளம் போரிட வேண்டியிருந்தது. (7:12) எண்ணி முடியாததாயிருந்த மீதியானியரையும், அமலேக்கியரையும் மேற்கொள்ள, கிதியோன் திரட்டியிருந்த படையின் எண்ணிக்கை 32,000 பேர்தான். அந்த, 32,000 பேர் போதுமா என்று எண்ணியிருந்த வேளையில், தேவன் எண்ணிக்கை அதிகம் என்றார் (7:2) பயமும், திகிலும் உள்ள கோழைகள் திரும்பிப் போகட்டும் என்று, கிதியோனின் மூலம் கட்டளை பிறப்பித்தார். (7:3) உண்மைச் சிப்பாய்களாக வேடமணிந்திருந்த, 22,000 "தொடை நடுங்கிகள்" ஓடிவிட்டனர். அங்கே, மீந்திருந்தவர் 10,000 பேரே.

கடற்கரை மணலைப் போலத் திரளாய் இருப்பவர்களை, இந்தப் 10,000 பேரை வைத்து எப்படிச் சமாளிப்பது என்று கிதியோன் தனக்குள் கலங்கியிருந்த வேளையில், கர்த்தர் கிதியோனைப் பார்த்து, "எண்ணிக்கை இன்னும் அதிகம்" என்றார். அங்கு, மீண்டும் ஒரு சோதனை நடத்தப்பட்டு, "காரியத்தில் கண் வைக்காத" 9,700 பேர் கழிக்கப்படுகின்றனர். கடைசியாக மீதம் இருந்தவர்கள் வெறும் 300 பேர் தான். இவர்கள் தான், எண்ணிலடங்காத மீதியானியரை நூதன முறையில் எதிர்கொண்டு வெற்றி கண்டவர்கள்.

சரி, நாம் வாழும் காலம் எண்ணிக்கைக்கு முக்கியத்துவம் கொடுக்கும் காலம். ஒருகாரியத்தை எத்தனை பேர் செய்கிறார்கள் அல்லது பின்பற்றுகிறார்களென்று பார்த்துத் தான் அதன் நிஜத்தன்மை நிர்ணயிக்கப்படுகிறது. நீதியும், நியாயமும் கணக்கிலெடுத்துக் கொள்ளப்படுவதில்லை. வேதாகமும் எண்ணிக்கையைப் பற்றிப் பேசினாலும், எண்ணிக்கை தான் முக்கியமென்று எங்கும் வலியுறுத்துவதில்லை. பெரிய எண்ணிக்கை பலத்தின் அறிகுறியாகவும் சிறிய எண்ணிக்கை பலவீனத்தின் அடையாளமாகவும் குறிப்பிடப்படவில்லை.

கிதியோன் திரட்டிய போர்ப்படையில் மிகப் பெரும்பாலானவர்கள் கோழைகளாகவும், காரியத்தில் கவனமில்லாதவர்களாகவும் இருந்தனர். ஒரு போர் வீரனுக்குண்டான அடிப்படைத் தகுதிகளே இல்லாமல் போர் வீரனாக இருக்க ஆசைப்பட்டவர்கள். உயிரே போனாலும், கொள்கைக்காக நிற்கவேண்டுமென்ற "சிப்பாய் மந்திரத்தைக்" கற்காத வர்கள்." இவர்களை தேவன் சரியான சமயத்தில் இனம் கண்டு, ஏற்ற சமயத்தில் விரட்டியடித்தார்.

எனதருமை வாசகரே! கிதியோன் திரட்டிய ஆரம்பப் படையின் அர்த்தமற்ற எண்ணிக்கை போல்தான், உலகெங்குமுள்ள குறிப்பாக இந்தியாவிலுள்ள கிறிஸ்தவ சபைகள் உள்ளதென்று சொன்னால் அது மிகையாகாது. ஞாயிற்றுக் கிழமைகளில் ஆலயங்களில் கூடும் கூட்டத்தைப் பார்த்தால், ஜனங்களின் பக்திப் பரவசம் அதிசயிக்க வைக்கும். பண்டிகை நாட்களிலும், விசேஷ கூட்டங்களிலும் சொல்லவே தேவையில்லை. ஓலைப்பந்தல்களும், ஷாமியானாக்களும் கூடத் தேவைப்படுகிறது. கூட்டம் தவறில்லை நல்லதே.

ஆனால், கிறிஸ்துவின் சேனையில், சிப்பாய்களாக இருக்க விரும்பும் மக்களே, கிறிஸ்து விரும்பும் "சீஷத்துவத்தின் விலையை" நீங்கள் கொடுக்க வேண்டும், வேதம் சொல்வதை மாத்திரம் தான் கேட்க வேண்டும், பக்தியின் வேஷமணிந்தால் போதாது, பக்தியாக இருக்க வேண்டும். பாடுகளைச் சகிக்க வேண்டும் சோதனைகளை வென்று நீதியுள்ள ஜீவியம் ஜீவிக்க வேண்டுமென்றெல்லாம் சொன்னால், முகம் சுளிக்கின்றனர். விசுவாசம் என்னும் கேடகத் தையும் ஆவியின் பட்டயத்தையும் எடுத்து எதிரியாகிய பிசாசை எதிர்த்துப் போரிடுவதை விட்டு, "விசுவாசத்தில் தொடை நடுங்கிகளாக" இருந்து, ". . . இது கடினமான உபதேசம் யார் இதைக் கேட்டார்கள்" என்று சொல்லி, "பின் வாங்குகின்றனர்" (யோவா. 6:60, 66)

"எண்ணிக்கை" மாயையிலிருந்து, நாம் உடனடியாக விடுதலையாகி, கொள்கை மறவர்களாக, குணக்குன்றுகளாக மாறுவோம். குறைவான வர்களாக இருந்தாலும், பெரிய காரியங்களைச் செய்ய முடியும் என்ற நம்பிக்கையைப் பெற்றுக் கொள்வோம். ". . . தேவன் நம்முடைய பட்சத் திலிருந்தால் நமக்கு விரோதமாயிருப்பவன் யார்?" (ரோம. 8:31) என்று பவுல் கூறுகிறார். வெறும், 12 பேராயிருந்த அப்போஸ்தலர்கள் உலகத்தைக் கலக்கியிருக்கும் பொழுது (அப். 17:6) நம்மால் ஏன் அது முடியாது? தேவனுடைய வல்லமை குன்றிப் போகவேயில்லை, என்பதை நாம் மறந்துவிட வேண்டாம்.

கூட்டத்தைப் பற்றியும், எண்ணிக்கையைப் பற்றியும் தேவையில்லாத இன்னும் பல காரியங்களைக் குறித்தும் நாம் கவலைப்படாமல் தேவனுடைய வார்த்தைகளுக்கு மாத்திரம் நம்மை ஒப்புக்கொடுப்போம். சபை பற்றியும், ஞானஸ்நானம் பற்றியும், பரிசுத்த ஆவி பற்றியும், இரட்சிப்பு பற்றியும், கிறிஸ்துவின் வருகை பற்றியும் பெரும்பான்மையானவர்களின் கருத்தென்னவென்று தேடி அலையாமல் அல்லது 'கூட்டத்தோடு கோவிந்தா' போடாமல், ''இறுதி நாளில் நம்மை நியாயந்தீர்க்கும் வசனத்திற்கு நம்மை ஒப்புக் கொடுப்போம் (யோவா 12:48)

'தேவனின் போர்ப்படையில்', போராளிகளாகும் வாய்ப்பைப் பெற்றிருக்கும் நாம், வெற்றிப் படையில் ஒருவராக இருக்கப்போகிறோமா அல்லது ஓடுகாலிகளாகவும், சோதனையில் வீழ்ந்து போகிறவர்களாகவும் இருக்கப் போகிறோமா?

## II. அவர்கள் தைரியமுள்ளவர்களாக இருந்தனர்

கிதியோனின் படையைச் சேர்ந்தவர்களுக்கு 'தைரியம்' மிக அவசியமாயிருந்தது. இது எல்லாப் படைக்குமே தேவையானது தான். போர்க்களத்துத் தேவைகளுள், எல்லாவற்றைக் காட்டிலும், நெஞ்சுரம் தான் பிரதானமானது. கொஞ்சம் புளித்த மா எல்லாவற்றையும் புளிப்பாக்கும் என்பது போல, தைரியமில்லாத ஒருவன், அநேகரை தைரியமில்லாதவர்களாக்க முடியும். ஆகவே தான் தேவன், கிதியோனின் படையை இரண்டு முறை வடிகட்டுகிறார். இறுதியாக, அவன் படையில் மீந்திருந்தவர்கள் 300 பேரே.

a) அவர்கள், தேவனைத் தங்கள் வழிகாட்டியாகவும், பலமாகவும் ஏற்றுக் கொண்டவர்கள்.

b) மீதியானியரிடமிருந்து விடுதலைபெறவேண்டுமென்ற விருப்பமுள்ளவர்கள்

c) அவர்களுக்கு வெற்றியில் பெரும் நம்பிக்கையிருந்தது.

d) அந்த நம்பிக்கை விசுவாசத்தினால் கட்டப்பட்டிருந்தது.

கர்த்தர்மீது நம்பிக்கை வைக்கும்போது, தைரியம் வலிய வரும். அதை அனுபவித்த தாவீது சொல்வதைக் கேளுங்கள். ''உம்மாலே நான் ஒரு சேனைக்குள் பாய்ந்து போவேன். என் தேவனாலே மதிலைத் தாண்டுவேன்'' (சங். 18:29) சாத்ராக், மேஷாக் ஆபத்நேகோ போன்றவர்கள் எரிகிற சூளையை ஏழு மடங்கு சூடாக்கியபொழுது கூட விசுவாசத்தின் அடிப்படையிலான தைரியத்தை அவர்கள் இழக்கவில்லை.

நண்பரே! கிறிஸ்துவைப் பின்பற்றும் நாம் ஒரு போராட்ட களத்தில் தான் உள்ளோம். ஆனால், நம்முடைய போராட்டத்தில் "பயம்" என்ற வார்த்தைக்கு இடமேயில்லை. வேதாகமம் இக்கருத்தை பெரும்பாலான இடங்களில் வலியுறுத்திச் சொல்கிறது.

"ஆகையால், எனக்குப் பிரியமான சகோதரரே! கர்த்தருக்குள் நீங்கள் படுகிற பிரயாசம் விருதாவாயிராதென்று அறிந்து, நீங்கள் உறுதிப்பட்டவர்களாயும், அசையாதவர்களாயும், கர்த்தருடைய கிரியையிலே பெருகுகிறவர்களாயும் இருப்பீர்களாக" (1கொரி. 15:58)"

"விழித்திருங்கள், விசுவாசத்திலே நிலைத்திருங்கள், புருஷராயிருங்கள், திடன் கொள்ளுங்கள்" (1 கொரி. 16:13)

"நீ படப்போகிற பாடுகளைக் குறித்து எவ்வளவும் பயப்படாதே; இதோ நீங்கள் சோதிக்கப்படும் பொருட்டாக, பிசாசானவன் உங்களில் சிலரைக் காவலில் போடுவான்; பத்து நாள் உபத்திரவப்படுவீர்கள்; ஆகிலும் நீ மரண பரியந்தம் உண்மையாயிரு அப்பொழுது, ஜீவ கிரீடத்தை உனக்குத் தருவேன்" (வெளி. 2:10)

இவ்வசனங்கள் ஒரு கிறிஸ்தவனுக்கு இருக்க வேண்டிய உறுதிப்பாட்டையும், தைரியத்தையும் பற்றிக் கூறுகிறது. ஆனால், நம்முடைய கிறிஸ்தவ ஜீவியத்தின் நிலை என்ன? நம்முடைய விசுவாசத்தைச் சீர்குலைத்து நம்மை மேற்கொள்ள முயலும் பிசாசானவனின் தந்திரங்களை முறியடிக்கிற விஷயத்தில், அவனுடைய வஞ்சக எண்ணங்களை விரட்டியடிக்கும் காரியத்தில், நாம் விழிப்புள்ளவர்களாகவும், தைரியமுள்ளவர்களாகவும் உள்ளோமா?

தைரியம் இல்லாத கிறிஸ்தவ ஜீவியம் நங்கூரம் இல்லாத கப்பலைப் போன்றது. எந்த நேரத்திலும் கவிழ்ந்து போகும் அபாயம் உள்ளது. ஆகையால், நாம், விசுவாசத்தின் அடிப்படையிலான தைரியத்தைப் பெற்று ஜீவிப்பது, வெற்றிக்கு அவசியம். ஜீவிப்போமா?

## III. அவர்கள் ஒப்புக் கொடுத்தத்தவர்களா இருந்தனர்

கிதியோனின் படையைத் தன்னுடைய படையாக மாற்ற தேவன் வைத்த சோதனை விசேஷமானது. எளிமையானது. ஆம், தண்ணீர் குடிக்கும்படி செய்கிறார். குடிப்பதற்கு, முழங்கால் ஊன்றியவர்கள்

வீட்டுக்கு அனுப்பப்பட்டனர். மாறாக, தண்ணீரை நக்கிக் குடித்த வர்கள் - அதாவது கையால் அள்ளி வாய்க்குக் கொண்டு வந்தவர்கள் இருத்தப்பட்டனர்.

தேவன் வைத்த இந்த சோதனை, அவர்கள் யாரென்று அடையாளம் காட்டியது.

a) அந்த 300 பேர் தங்கள் சிந்தைகளையும், பார்வைகளையும் எதிரிகளின் மீது வைத்துக்கொண்டே தண்ணீர் குடித்தவர்கள் அதாவது, காரியத்தில் கண்ணாக இருந்தவர்கள்.

b) அந்த 300 பேர் தேவையானவற்றிற்கு, தேவையில்லாத நேரத்தைச் செலவிட விரும்பாதவர்கள். அழைக்கப்பட்ட அழைப்புக்கு தங்களை ஒப்புக்கொடுத்தவர்கள்.

தண்ணீர் குடித்ததை தேவன் அங்கே தவறாக கருதவில்லை. ஆனால், தண்ணீர் குடித்த விதம் அங்கே கணக்கிலெடுத்துக் கொள்ளப் பட்டது.

நண்பரே! நம்முடைய கிறிஸ்தவ போராட்டத்தில் கூட நாம் செயல் படும் விதம் கணக்கிலெடுத்துக் கொள்ளப்படும். புகழ்பெற்ற மலைப் பிரசங்கத்தில், இயேசுக் கிறிஸ்து, சரீரத்தின் தேவைகளையே பெரிதாக எண்ணிய மக்களிடம், அது தேவையற்றது என்று கூறாமல், "முதலாவது தேவனுடைய இராஜ்யத்தையும், அவருடைய நீதியையும் தேடுங்கள், அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக் கூடக் கொடுக்கப்படும்" என்றார். (மத். 6:33) அழிந்து போகும் சரீரத்தின் தேவைகளைச் சந்திப்பதே வாழ்க்கையின் பிரதான நோக்கமாகிவிடக் கூடாது.

உணவும், உடையும், வீடும், வேலையும், வருமானமும், ஓய்வும், மன மகிழ்ச்சியாயிருப்பதும் அவசியமே. ஆனால், அதற்கே முழு நாளையும், கிடைக்கும் நேரத்தையும் செலவிடக்கூடாது. நாம், இந்த பூமியின் நாட்களை எப்படிச் செலவிட வேண்டுமென்று அப்போஸ்தலன் பவுல் எபேசியருக்கு எழுதும்போது, "ஆனபடியினாலே நீங்கள் ஞானமற்றவர் களைப் போல நடவாமல், ஞானமுள்ளவர்களைப் போல கவனமாய் நடந்து கொள்ளப்பார்த்து, நாட்கள் பொல்லாதவைகளானதால், காலத்தைப் பிரயோஜனப்படுத்திக் கொள்ளுங்கள்" என்று கூறுகிறார். (எபே. 5:15, 16)

பரதேசியாய்த் தங்கும்படி கொடுக்கப்பட்ட இப்பூமியின் வாழ்க் கையைப் பெரிதாக நினைத்து, அதுவே சதமென்று எண்ணி சாவகா

சமாக நம்முடைய நாட்களைக் கழிக்காமல், "தேவையானது ஒன்றே" என்பதை மரியாளைப் போல அறிந்து, (லூக். 10:42), அதன்படி ஜீவிக்க நம்மை ஒப்புக் கொடுக்க வேண்டும்.

அன்பரே! நம்முடைய கிறிஸ்தவ ஜீவியம் எப்படியுள்ளது? கிறிஸ்தவ ஜீவியம், ஒரு போராட்ட ஜீவியமாக இருக்கிறபடியால் நம் போராட்டத்தின் நிலை என்ன? தேவனால், தெரிந்து கொள்ளப்பட்ட கிதியோனின் இறுதிப் படைக்குண்டான குண இலட்சணங்கள் நமக்கு உண்டா? ஒருவேளை, அப்பண்புகள் நமக்கிராவிட்டால் அவைகளைப் பெற்று ஜீவிக்க நாம் முயற்சிப்போம். ஆம், நாம் எண்ணிக்கையில் குறைவாயிருப்பதைக் குறித்துக் கவலைப்படாமல் கொள்கைக்காக, விசுவாசத்திற்காக நிற்போம்! கிறிஸ்தவ ஜீவியத்தில் தைரியமுள்ளவர்களாயிருப்போம்!! தெரிந்து கொள்ளப்பட்ட நிலைக்கு நம்மை ஒப்புக் கொடுப்போம்!!! பெரும் வெற்றி பெறுவோம்!!!!

EZS ராஜநாயகம்

## தேவன் கொடுக்கும் சர்வாயுதம்

1. சத்தியம் என்னும் கச்சை
2. நீதி என்னும் மார்க்கவசம்
3. ஆயத்தம் என்னும் பாதரட்சை
4. விசுவாசம் என்னும் கேடகம்
5. இரட்சணியம் என்னும் தலைச்சீரா
6. தேவ வசனம் என்னும் ஆவியின் பட்டயம்

எபே. 6 : 13 - 17

# கொர்நேலியுவும் அவன் வீட்டாரும் பரிசுத்த ஆவியின் திருமுழுக்குப் பெற்றனர்

அப்போஸ்தலர்கள் பரிசுத்த ஆவியின் திருமுழுக்கைப் பெற்ற பின்னர், கொர்நேலியுவும் அவன் வீட்டாரும் சம்பந்தப்பட்ட பரிசுத்த ஆவியின் மற்றும் ஒரு திருமுழுக்கைப் பற்றி கடந்த பாடத்தில் சிறிது கவனித்தோம். இப்போது, அப்போஸ்தலர்களுக்குப் பின்னர், கொர்நேலியுவும் அவன் வீட்டாரும் மட்டுமே பரிசுத்த ஆவியின் திருமுழுக்கைப் பெற வேண்டிய அவசியம் என்ன என்பது பற்றி சற்று விரிவாகக் காண்போம்.

அப்போஸ்தலர்களை சத்தியத்தில் வழி நடத்தவும், கிறிஸ்து உபதேசத்தை அவர்களுக்கு நினைப்பூட்டவும், கூடுதலான சத்தியங்களை அவர்களுக்கு வெளிப்படுத்தவும், அந்நிய பாஷைகளில் பேசும் வல்லமையை அவர்களுக்கு அளிக்கவும், அற்புதங்கள் செய்யும் சக்தியை அவர்களுக்கு தருவதற்காகவும், தேற்றரவாளனை அல்லது பரிசுத்த ஆவியை அப்போஸ்தலர்களிடம் அனுப்புவதாக கிறிஸ்து வாக்களித்திருந்தார் என்பதை ஏற்கனவே நாம் குறிப்பிட்டிருந்தோம். இவை அனைத்திற்கும் காரணம் என்னவென்றால், அக்கால கட்டத்தில், புதிய ஏற்பாடு இன்னும் வெளியிடப்படாத நிலையில், தேவனுடைய கட்டளைகளை மக்களுக்கு வெளிப்படுத்த, தேவனால் அப்போஸ்தலர்கள் அனுப்பப்பட்டிருந்தனர் என்பதை மக்கள் நம்பும்படியாக பரிசுத்த ஆவியானவரின் வல்லமையை அவர்கள் பெற்றிருந்தனர். ஒரு முறை, புதிய ஏற்பாடானது முற்றிலுமாக பூர்த்தியாகி விட்டிருந்தால், இப்படிப்பட்ட அற்புத வழிநடத்தலுக்குத் தேவையில்லா திருந்திருக்கும். அதன்பின்னர், அப்போஸ்தலர்களும் மரணமடைந்து விட்டிருந்தனர். எனவே இன்று நாம் யாரும் பரிசுத்த ஆவியின் திருமுழுக்கைப் பெற்றுக் கொள்ள வேண்டிய தேவையில்லை. கிறிஸ்து ஒருவரே பரிசுத்த ஆவியின் திருமுழுக்கை அளிப்பவராக இருப்பதால், இன்று அந்த வல்லமையை யாரும் அடைந்திருக்க இயலாது.

மேலே குறிப்பிட்டவை உண்மையாக இருந்தால் (அவை உண்மைதான்) பின்னர் கொர்நேலியுவும் அவன் வீட்டாரும் பரிசுத்த ஆவியின் திருமுழுக்கை ஏன் பெற்றனர்? அப்போஸ்தலருடைய நடபடிகள், **10, 11** அதிகாரங்களை நீங்கள் படித்துப் பார்த்தபின் அதற்கான விடையைக் காண்பீர்கள் என நான் நினைக்கிறேன். கொர்நேலியுவும் அவன் வீட்டாரும் புற ஜாதியாக இருந்த படியால், கர்த்தர் அவர்களுக்கு பரிசுத்த ஆவியின் திருமுழுக்கைக் கொடுத்து, ஆகையால் யூதர்களைப்

போலவே புறஜாதியாரும் தேவனால் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறார்கள் என்பதையும், தேவன் பட்சபாத மற்றவர் என்பதை யூதர்களுக்கும் புறஜாதியாருக்கும் நிரூபித்துக் காட்டவும் அவ்வாறு செய்தார் என்ற உண்மை பளிச்சென்று தெரிய வரும்.

அப்போஸ்தலருடைய நடபடிகள் 10-ம் அதிகாரத்தில், நாம் கொர்நேலியுவுக்கும், அவன் வீட்டாருக்கும் அறிமுகம் செய்து வைக்கப் படுகிறோம். கொர்நேலியு ஒரு நீதிமானும், ஏழைகளுக்கு தருமங்கள் செய்தவனும், எப்பொழுதும் தேவனை நோக்கி ஜெபம் பண்ணுகிறவனுமாக இருந்தான். இப்படியிருக்கையில், தேவனுடைய தூதன் ஒருவன் அவனிடம் வந்து, அவனுடைய ஜெபங்களும் தருமங்களும் தேவனுக்கு நினைப்பூட்டுதலாக அவர் சந்நிதியில் வந்தெட்டியது என்று கூறினார். பின்னர் தொடர்ந்து கொர்நேலியுவை நோக்கி யோப்பா பட்டணத்துக்கு மனிதரை அனுப்பி பேதுருவை அழைப்பித்து, தான் என்ன செய்ய வேண்டுமென அவனிடம் கேட்கச் சொன்னான். ஆனால், கொர்நேலியு என்ன செய்ய வேண்டுமென்று அந்த தூதனே அவனிடம் ஏன் சொல்லவில்லை? ஏனென்றால், நற்செய்தியானது "மண் பாண்டங்களில்" வைக்கப்பட்டிருந்தது ஆம், மனிதர்களிடம் தான். எனவேதான், பேதுருவைப் போன்ற ஒரு மனிதன் கொர்நேலியுவுக்கும் அவன் குடும்பத்திற்கும் செய்தியை கொண்டு வர வேண்டியதாயிருந்தது. 'கர்த்தர் என்னிடம் பேசினார்' அல்லது 'ஒரு தூதன் வந்து தேவனின் விருப்பத்தை எனக்கு வெளிப்படுத்தினான்' என்றெல்லாம் உரிமை கொண்டாடும் பலர் தம் அனைவருக்கும் மிகவும் அறிமுகமானவர்கள் என்பதை இங்கு நான் குறிப்பிட விரும்புகிறேன். நிச்சயமாக இவ்விதக் கூற்றுக்கள் அனைத்தும் வேதாகமத்தின் போதனைகளுக்கு முற்றிலும் மாறுபாடானவைகளாகும். மனிதனுடன் கர்த்தர் இன்று அவ்வாறு நடந்து கொள்ளுபவராக இருப்பின், ஏற்கனவே நாம் பார்த்தது போல, கொர்நேலியுவிடம் பேதுருவை அனுப்புவதற்குப் பதிலாக, அந்த தூதனே கொர்நெலியுவிடம் என்ன செய்ய வேண்டும் என்று ஏன் சொல்லவில்லை?

ஆனால் இப்போது அந்தக் காட்சி யோப்பா பட்டணத்தில் சீமோன் என்ற தோல் பதனிடுகிறவன் வீட்டிற்குத் திரும்புகிறது. அங்கே பேதுரு ஜெபம் பண்ண, மேல் வீட்டில் ஏறியதை நாம் பார்க்கிறோம். அவன் மிகுந்த பசியுடன் சாப்பிட மனதாயிருந்த வேளை, அவன் ஞான திருஷ்டி அடைந்து, தன் முன்னே சகலவித நாலுகால் ஜீவன்களும், காட்டு மிருகங்களும், ஊரும் பிராணிகளும், ஆகாயத்து பறவைகளும் இருக்கக் கண்டான். மேலும், பேதுருவை நோக்கி அவற்றை அடித்துப்

புசி என ஒரு சத்தம் உண்டாகவும் பேதுரு அந்த தரிசனத்தைக் குறித்து சிந்தித்துக் கொண்டிருக்கும் போது, கொர்நேலியு அனுப்பிய மனிதர்கள் பேதுருவைத் தேடிக் கொண்டு வந்தனர். பின்னர், 'ஒன்றுக்கும் சந்தேகப்படாமல் அவர்களுடனே கூடப் போ' என ஆவியானவர் பேதுருவிடம் கூறினார்.

அதன் பின்னர் வசனங்கள் தொடருகின்றன : "மறுநாளிலே செசரியா பட்டணத்தில் பிரவேசித்தார்கள். கொர்நேலியு தன் உறவின் முறையாரையும் தன்னுடைய விசேஷித்த சிநேகிதரையும் கூட வரவழைத்து, 'அவர்களுக்காகக் காத்திருந்தான். பேதுரு உள்ளே பிரவேசிக்கிற பொழுது, கொர்நேலியு அவனுக்கு எதிர் கொண்டு போய், அவன் பாதத்தில் விழுந்து, பணிந்து கொண்டான். பேதுரு அவனைத் தூக்கியெடுத்து; எழுந்திரும், நானும் ஒரு மனிதன் தான் என்றான். அவனுடனே பேசிக்கொண்டு, உள்ளே போய், அநேகர் கூடி வந்திருக்கிறதைக் கண்டு, அவர்களை நோக்கி அந்நிய ஜாதியானோடே கலந்து அவனிடத்தில் போக்கு வரவாய் இருப்பது யூதனானவனுக்கு விலக்கப்பட்டிருக்கிறதென்று நீங்கள் அறிந்திருக்கிறீர்கள்; அப்படியிருந்தும், எந்த மனிதனையும் தீட்டுள்ளவனென்றும் அசுத்தனென்றும் நான் சொல்லாதபடிக்கு தேவன் எனக்குக் காண்பித்திருக்கிறார். ஆகையால் நீங்கள் என்னை அழைப்பித்த போது நான் எதிர் பேசாமல் வந்தேன். இப்போதும் என்ன காரியத்துக்காக என்னை அழைப்பித்தீர்கள் என்று கேட்கிறேன் என்றான். அதற்குக் கொர்நேலியு நாலு நாளைக்கு முன்னே இந்நேரத்திலே நான் உபவாசமிருந்து, ஒன்பதாம் மணி நேரத்தில் என் வீட்டிலே ஜெபம் பண்ணிக் கொண்டிருந்தேன், அப்பொழுது பிரகாசமுள்ள வஸ்திரம் தரித்த மனிதன் ஒருவன் எனக்கு முன்பாக நின்று; கொர்நேலியுவே, உன் ஜெபம் கேட்கப்பட்டது. உன் தான தருமங்கள் தேவ சந்நிதியில் நினைத்தருளப்பட்டது. யோப்பா பட்டணத்துக்கு ஆள் அனுப்பி, பேதுரு என்று மறுபேர் கொண்ட சீமோனை வரவழைப்பாயாக, அவன் கடலோரத்திலே தோல் பதனிடுகிறவனாகிய சீமோனுடைய வீட்டிலே தங்கியிருக்கிறான்; அவன் வந்து உன்னிடத்தில் பேசுவான் என்றார். அந்தப் படியே நான் உடனே உம்மிடத்திற்கு ஆள் அனுப்பினேன்; நீர் வந்தது நல்ல காரியம்; தேவனாலே உமக்குக் கட்டளையிடப்பட்ட யாவையும் கேட்கும்படிக்கு நாங்கள் எல்லாரும் இப்பொழுது இங்கே தேவ சமுகத்தில் கூடியிருக்கிறோம் என்றான். அப்பொழுது பேதுரு பேசத் தொடங்கி தேவன் பட்சபாதமுள்ளவரல்ல என்றும், எந்த ஜனத்திலாயினும் அவருக்குப் பயந்திருந்து நீதியைச் செய்கிறவன் எவனோ அவனே அவருக்கு உகந்தவன் என்றும் நிச்சயமாய் அறிந்திருக்கிறேன் எல்லாருக்கும் கர்த்தராயி

ருக்கிற இயேசு கிறிஸ்துவைக் கொண்டு அவர் சமாதானத்தைச் சுவிசேஷமாய்க் கூறி, இஸ்ரவேல் புத்திரருக்கு அனுப்பின வார்த்தையை அறிந்திருக் கிறீர்களே. யோவான் ஞானஸ் நானத்தைக் குறித்துப் பிரசங்கித்த பின்பு, கலிலேயே நாடு முதற் கொண்டு யூதேயா தேசமெங்கும் நடந்த சங்கதி இதுவே. நசரேயனாகிய இயேசுவைத் தேவன் பரிசுத்த ஆவியினாலும் வல்லமையினாலும் அபிஷேகம் பண்ணினார்; தேவன் அவருடனே கூட இருந்தபடியினாலே அவர் நன்மை செய்கிறவராயும் பிசாசின் வல்லமையில் அகப்பட்ட யாவரையும் குணமாக்குகிறவராயும் சுற்றித்திரிந்தார். யூதருடைய தேசத்திலும் எருசலேமிலும் அவர் செய்தவைகள் எல்லாவற்றிற்கும் நாங்கள் சாட்சிகளாயிருக்கிறோம். அவரை மரத்திலே தூக்கிக் கொலை செய்தார்கள். மூன்றாம் நாளிலே தேவன் அவரை எழுப்பிப் பிரத்தியட்சமாய்க் காணும்படி செய்தார். ஆயினும் எல்லா ஜனங்களுக்கும் பிரத்தியட்சமாகும்படி செய்யாமல், அவர் மரித்தோரிலிருந்து எழுந்த பின்பு அவரோடே புசித்துக் குடித்தவர்களும் தேவனால் முன்பு நியமிக்கப் பட்ட சாட்சிகளுமாகிய எங்களுக்கே பிரத்தியட்சமாகும்படி செய்தார். அன்றியும் அவரே உயிரோடிருக்கிறவர்களுக்கும் மரித்தோர்களுக்கும் தேவனால் ஏற்படுத்தப்பட்ட நியாயாதிபதியென்று ஜனங்களுக்குப் பிரசங்கிக்கவும், சாட்சியாக ஒப்புவிக்கவும், அவர் எங்களுக்குக் கட்டளையிட்டார். அவரை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் அவருடைய நாமத்தினாலே பாவமன்னிப்பைப் பெறுவானென்று தீர்க்கதரிசிகள் எல்லாரும் அவரைக்குறித்தே சாட்சி கொடுக்கிறார் என்றான். இந்த வார்த்தைகளைப் பேதுரு பேசிக் கொண்டிருக்கையில் வசனத்தைக் கேட்டவர்கள் யாவர் மேலும் பரிசுத்த ஆவியானவர் இறங்கினார். அவர்கள் பல பாஷைகளைப் பேசுகிறதையும், தேவனைப் புகழுகிறதையும், பேதுருவோடே கூட வந்திருந்த விருத்த சேதனமுள்ள விசுவாசிகள் கேட்கும்போது, பரிசுத்த ஆவியின் வரம் புற ஜாதிகள் மேலும் பொழிந்தருளப்பட்டதைக் குறித்து பிரமித்தார்கள். அப்பொழுது பேதுரு நம்மைப் போல பரிசுத்த ஆவியைப் பெற்ற இவர்களும் ஞானஸ்நானம் பெறாதபடிக்கு எவனாகிலும் தண்ணீரை விலக்கலாமா என்று சொல்லி, கர்த்தருடைய நாமத்தினாலே அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுக்கும்படி கட்டளையிட்டான். அப்பொழுது சில நாள் அங்கே தங்கும்படி அவனை வேண்டிக் கொண்டார்கள்.'' (அப். *10:24-48)*

பின்னர், அப்போஸ்தலருடைய நடபடிகள் 11-ம் அதிகாரத்தில், பேதுரு எருசேலம் வரை சென்று, செசரியாவில் கொர்நேலியுவோடும் அவன் வீட்டாரோடும் நடைபெற்ற அனைத்தையும் சீடர்களிடம்

விவரிக்கிறார். சகல விவரங்களையும் கூறிய பின்னர்,"நான் பேசத் தொடங்கின போது, பரிசுத்த ஆவியானவர் ஆதியிலே நம்மேல் இறங்கினது போலவே, அவர்கள் மேலும் இறங்கினார். யோவான் ஜலத்தினாலே ஞானஸ்நானம் கொடுத்தான், நீங்களோ பரிசுத்த ஆவியினாலே ஞானஸ்நானம் பெறுவீர்கள் என்று கர்த்தர் சொன்ன வார்த்தையை அப்பொழுது நினைவு கூர்ந்தேன். ஆதலால் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசித்திருக்கிற நமக்குத் தேவன் வரத்தை அநுக்கிரகம் பண்ணினது போல அவர்களுக்கும் அந்த வரத்தையே அநுக்கிரகம் பண்ணியிருக்கும் போது தேவனைத் தடுக்கிறதற்கு நான் எம்மாத்திரம் என்றான். இவைகளை அவர்கள் கேட்டபொழுது அமர்ந்திருந்து அப்படியானால் ஜீவனுக்கேதுவான மனந்திரும்புதலைத் தேவன் புறஜாதியாருக்கும் அருளிச் செய்தார் என்று சொல்லி, தேவனை மகிமைப்படுத்தினார்கள்" என்று பேதுரு கூறுகிறார். (அப். 11:15-18)

பின், ஏன் கொர்நேலியுவும் அவன் வீட்டாரும் பரிசுத்த ஆவியானவரின் திருமுழுக்கைப் பெற்றனர்? தொடக்கத்திலிருந்து சொல்லப் போனால், அப்போஸ்தலர்கள் மட்டுமே முதலில் பரிசுத்த ஆவியானவரின் திருமுழுக்கைப் பெற்றிருந்தனர். தாங்கள் பெற்றுக் கொண்டதைப் போல, அதாவது அப்போஸ்தலர்கள் ஆரம்பத்தில் பெற்றதைப் போல, கொர்நேலியுவும் அவன் வீட்டாரும் இப்போது பரிசுத்த ஆவியின் திருமுழுக்கைப் பெற்றார்கள் என்று பேதுரு விளக்கினான். தேவன் பட்சபாதமற்றவர் என்பதை யூதர்களுக்கு எடுத்துக் காட்ட இவ்வாறு நடந்தது. ஏனெனில், யூதர்கள், அதாவது அப்போஸ்தலர்கள், பரிசுத்த ஆவியின் திருமுழுக்கைப் பெற்றுக் கொண்டிருந்த வேளையில், புற ஜாதியார்கள் இன்னும் பரிசுத்த ஆவியானவரின் திருமுழுக்கைப் பெற்றிருக்கவில்லை.

அப்போஸ்தலர்களையும் கொர்நேலியுவின் வீட்டாரையும் தவிர வேறு யாராவது பரிசுத்த ஆவியானவரின் திருமுழுக்கைப் பெற்றிருந்தனரா? அவ்வாறு இருந்தால், அதைப்பற்றி புதிய ஏற்பாட்டில் நாம் ஒன்றும் பார்க்க முடியவில்லை. அதன் பின்னர், பரிசுத்த ஆவியின் திருமுழுக்கு வேறு யாராவது பெற்றதாக எவ்விதமான சுவிசேஷ ஆதாரமும் இல்லை. இன்று பலர் தாங்கள் பரிசுத்த ஆவியின் திருமுழுக்கைப் பெற்றிருப்பதாகக் கூறிக் கொள்ளுகின்றனர். ஆனால் அவர்கள் போதிப்பதும் நடப்பதும் பரிசுத்த ஆவியானவரின் உபதேசங்களுக்கு முற்றிலும் மாறுபட்டவை களாக இருக்கின்றன. இப்படிப் பட்ட அனைவரும் ஏமாற்றப்பட்டுள்ளனர், எனவே தவறில் இருக்கின்றனர் என்பதை நாம் நம்ப முடிகிறது.

J.C. சோட்

## பெண்கள் பகுதி

# சபையில் பெண்களுக்கு பங்கு

சகல கிறிஸ்தவர்களுக்கும் வேதாகமம் கட்டளைகளைத் தருகின்றது. கர்த்தரின் சபையில் பெண்கள் சில காரியங்களைச் செய்யத் தடை செய்யப்பட்டுள்ளது. சில காரியங்களை நாம் செய்ய வேண்டுமென்று கட்டளையிடுகிறது.

### பெண்கள் செய்யக்கூடாதவை என்ன?

கண்காணி (மூப்பர்), உதவிக்காரன் ஆகிய பதவிகளை வகிக்கலாகாது. கணவானன ஆண்களே இப்பொறுப்புகளை வகிக்க வேண்டுமென சுவிசேஷம் குறிப்பிட்டுக் கூறுகிறது. (1 தீமோ. 3: 1-13; தீத்து 1 : 5-6) பொது ஆராதனையில் பெண்கள் போதிக்கவோ, பிரசங்கிக்கவோ கூடாது. கிறிஸ்தவ ஆண்கள் இருக்கும்போது, அவர்களே போதிக்கும் அதிகாரமுடையவர்கள்; பெண்கள் அடக்கமுடையவர்களாக அமைதியாக இருக்க வேண்டும். போதிக்கும் அதிகாரம் தங்களுக்கு உண்டு என்று வாதாடக்கூடாது. ''ஸ்திரீயானவள் எல்லாவற்றிலும் அடக்கமுடையவளாயிருந்து, அமைதலோடு கற்றுக் கொள்ளக்கடவள், உபதேசம் பண்ணவும், புருஷன் மேல் அதிகாரஞ் செலுத்தவும், ஸ்திரியானவளுக்கு நான் உத்தரவு கொடுக்கிறதில்லை; அவள் அமைதலாயிருக்க வேண்டும்.'' (1 தீமோ. 2:11-12)

### பெண்கள் எதைச் செய்யலாம்?

பிற பெண்களுக்குப் போதிக்கவும், நல்ல முன் மாதிரியாக வாழவும் கிறிஸ்தவப் பெண்களுக்குக் கூறப்பட்டுள்ளது. அப்போஸ்தலர் பவுல் தீத்துவுக்கு எழுதுகிறார் : ''முதிர்வயதுள்ள ஸ்திரீகளும் அப்படியே பரிசுத்தத்துக் கேற்ற விதமாய் நடக்கிறவர்களும், அவதூறு பண்ணாதவர்களும், மதுபானத்துக்கு அடிமைப்படாதவர்களுமாயிருக்கவும், தேவ வசனம் தூஷிக்கப்படாதபடிக்குப் பாலிய ஸ்திரீகள் தங்கள் புருஷரிடத்திலும், தங்கள் பிள்ளைகளிடத்திலும் அன்புள்ளவர்களும், தெளிந்த புத்தியுள்ளவர்களும், கற்புள்ளவர்களும், வீட்டில் தரித்திருக்கிறவர்களும், நல்லவர்களும், தங்கள் புருஷருக்குக் கீழ்ப்படிகிறவர்களுமாயிருக்கும்படி, அவர்களுக்கு படிப்பிக்கத்தக்க நற்காரியங்களைப் போதிக்கிறவர்களுமாயிருக்கவும் முதிர் வயதுள்ள ஸ்திரீகளுக்குப் புத்தி சொல்லு'' - தீத்து. 2:3-5 குழந்தைகளை நல்வழியில் வளர்ப்பதும், அந்நியரை உபசரிப்பதும்,

பிறருக்கு உதவுவதும், சகலவித நற்கிரியைகளை செய்கிறவர்களாயும்ம கிறிஸ்தவ பெண்மணிகள் நடக்க வேண்டும். (1 தீமோ. 5:10).

சகல கிறிஸ்தவர்களுக்கும் கொடுக்கப்பட்ட கட்டளைகளுக்கும் பெண்கள் கீழ்ப்படிய வேண்டும். பாட்டு பாடுவது (எபே. 5:19), ஜெபிப்பது (1 தெச. 5:17-18), உற்சாகமாகக் கொடுப்பது (1கொரி. 9:7) ஆகியவை இக்கட்டளைகளில் சில சபைக் காரியங்களில் கிறிஸ்தவ பெண்மணிகள் பங்கு பெற வேண்டியது அவசியம்; அதே சமயத்தில், சுவிசேஷம் நமக்கு விதித்துள்ள வரம்பிற்குள் மட்டுமே செயல்படவேண்டும் என்பதும் அவசியமே.

R.R. நாயகம்

# அன்பின் சிறப்பு

| | |
|---|---|
| அன்பு | பொறுமையுள்ளது |
| அன்பு | பரிவுள்ளது |
| அன்பு | உண்மையைக் கண்டு மகிழும் |
| அன்பு | அனைத்தையும் தாங்கிக் கொள்ளும் |
| அன்பு | அழுக்காறு கொள்ளாது |
| அன்பு | பெருமை பேசாது |
| அன்பு | இறுமாப்பு அடையாது |
| அன்பு | இழிவானதைச்செய்யாது |
| அன்பு | தன்னலத்தை நாடாது |
| அன்பு | சீற்றத்துக்கு இடந்தராது |
| அன்பு | வர்மம் வைக்காது |
| அன்பு | வர்மம் வைக்காது |
| அன்பு | அநியாயத்தைக்கண்டு மகிழ்வுறாது |
| அன்புக்கு | என்றும் முடிவிராது. |

# இயேசு கிறிஸ்துவின் வருகைகள்

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு ஒரு முறையும், அடுத்து, வருங்காலத்தில் எப்போதோ ஒருமுறையும் ஆக இரண்டே இரண்டு தடவைகள் தான் இயேசு கிறிஸ்துவின் வருகைகள் வேதாகமத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாக தவறாக பல வேளைகளில் எண்ணப்படு கிறது. ஆனால் இயேசுவின் வருகைகள் பற்றி வேதாகமம் கூறுவது இந்த இரு தடவைகள் மட்டுமல்ல.

## 1. நீதிபரருடைய வருகை :

''தீர்க்கதரிசிகளில் யாரை உங்கள் பிதாக்கள் துன்பப்படுத்தாமல் இருந்தார்கள்? நீதிபரருடைய வருகையை முன்னறிவித்தவர்களையும் அவர்கள் கொலை செய்தார்கள். இப்பொழுது நீங்கள் அவருக்குத் துரோகிகளும் அவரைக் கொலை செய்த பாதகருமாயிருக்கிறீர்கள்''. (அப். 7:52)

பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசிகள் மேசியா (கிறிஸ்து) வருவதை முன்னறிவித்திருந்தனர். கிறிஸ்துவையும் கொலை செய்து தன்னையும் சித்திரவதைப்படுத்திய யூதர்களிடம் ஸ்தேவான் இதை நினைவு படுத்தினான். இது இயேசுவின் வருகை பற்றிய ஒரு தெளிவான குறிப்பு ஆகும் : ''கிறிஸ்துவும் அநேகருடைய பாவங்களைச் சுமந்து தீர்க்கும்படிக்கு ஒரேதரம் பலியிடப்பட்டு'', (எபி. 9:28).

1. நாம் பாவங்களுக்குச் செத்து நீதிக்குப் பிழைத்திருக்கும்படிக்கு, அவர்தாமே தமது சரீரத்திலே நம்முடைய பாவங்களைச் சிலுவையின் மேல் சுமந்தார்...'' (1 பேதுரு 2:24).

''இழந்து போனதைத் தேடவும் இரட்சிக்கவுமே மனித குமாரன் வந்திருக்கிறார்'' என இயேசு கூறினார். (லூக்கா 19:10).

## 2. கிறிஸ்து இரண்டாவது முறை தோன்றுவார்

''கிறிஸ்துவும் அநேகருடைய பாவங்களைச் சுமந்து தீர்க்கும் படிக்கு ஒரே தரம் பலியிடப்பட்டு, தமக்காகக் காத்துக் கொண்டிருக்கிறவர்களுக்கு இரட்சிப்பை அருளும்படி இரண்டாந்தரம் பாவமில்லாமல் தரிசனமாவார்''. (எபி. 9:28)

"அநேகருடைய பாவங்களை சுமந்து தீர்க்க" (அப். 1:11) இயேசு கிறிஸ்து முதலில் தோன்றியது போல "கடைசி காலத்திலே வெளிப்பட ஆயத்தமாக்கப்பட்டிருக்கிற" (1 பேதுரு 1:5) "நித்திய இரட்சிப்புக்குள்" (எபி. 5:9) கொண்டு வர, "இரண்டாவது முறையும்" அவர் தோன்றுவார்.

"மனித குமாரன் தம்முடைய பிதாவின் மகிமை பொருந்தினவராய்த் தம்முடைய தூதரோடுங்கூட வருவார்; அப்பொழுது, அவனவன் கிரியைக்குத் தக்கதாக அவனவனுக்குப் பலனளிப்பார்". (மத். 16:27-2 கொரி 5:10 வசனத்தையும் பார்க்க).

அதே சமயத்தில், நியாயவான்களை தமது நித்திய, பரலோக இராஜ் ஜியத்திற்குள் அழைத்துக் கொள்ள இயேசு வருகிறார். (மத். 25:34;2 பேதுரு 1:11;2 தீமோ 4:18). கெட்டவர்களை அவர் நியாயந்தீர்த்து, பிசாசுகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ள நித்திய ஆக்கினைக்குள் தள்ளுவார். (மத். 25:41, 46). இயேசுவின் இந்த வருகை, உயிர்த்தெழுதல் நடக்கும் "கடைசி நாளிலே" ஏற்படும். (யோவான் 11:24). அந்த நாளிலே நன்மை செய்தவர்களும், தீமை செய்தவர்களும் உயிர்த்தெழுவார்கள். (யோ. 5:28-29; அப். 24:15).

ஆனால், புதிய ஏற்பாடு இயேசுவின் மற்ற வருகைகள் பற்றியும் கூறுகிறது.

## 3. இயேசு வந்து அவர்கள் மத்தியில் நின்றார்

". . . . சீஷர்கள் கூடியிருந்த இடத்தில், யூதர்களுக்குப் பயந்ததினால் கதவுகள் பூட்டியிருக்கையில், இயேசு வந்து நடுவே நின்று : உங்களுக்கு சமாதானம் என்றார்." (யோ. 20:19).

அவர் கைது செய்யப்படுவதற்கு சிறிது முன்பாக, இயேசு தமது அப்போஸ்தலர்களிடம், தாம் விரைவில் அவர்களை விட்டுப் பிரிந்து போவதாகவும் (வரப்போகும் தமது மரணத்தைக் குறிப்பிட்டார்), ஆனால் "கொஞ்ச காலத்திலே மீண்டும் என்னைக் காண்பீர்கள்" (யோவான் 16:16, 22) என்றும் ஆறுதல் சொன்னார். அவர் வாக்களித்திருந்தபடி, அவருடைய உயிர்ப்புக்குப் பின்பு இயேசு வந்து அவருடைய அப்போஸ்தலர்களுக்குத் தோன்றினார். ". . . சீஷர்கள் கர்த்தரைக் கண்டு சந்தோஷப்பட்டார்கள்." (யோவான் 20:20).

## 4. அவனிடத்தில் நான் வருவேன்

"இதோ, வாசற்படியிலே நின்று தட்டுகிறேன்; ஒருவன் என் சத்தத்தைக் கேட்டு, கதவைத் திறந்தால், அவனிடத்தில் நான் பிரவேசித்து, அவனோடே போஜனம் பண்ணுவேன், அவனும் என்னோடே போஜனம் பண்ணுவான்" (வெளி. 3:20).

இது இயேசுவின் வசனத்திற்குக் கீழ்ப்படிந்து அவரை நேசிக்கும் ஒவ்வொரு மனிதனுக்கும் அவர் அளித்திடும் வாக்குத்தத்தம். ". . . அவனில் என் பிதா அன்பாயிருப்பார்; நாங்கள் அவனிடத்தில் வந்து அவனோடே வாசம் பண்ணுவோம்". (யோவான் 14:23 - எபே. 3:17 வசனத்தையும் பார்க்க). இந்த வாக்குத்தத்தம் காலத்தின் இறுதி வரை, கீழ்ப்படிவோர் அனைவருக்கும் அளிக்கப்பட்டதாகும்.

## 5. கிறிஸ்து தமது இராஜ்ஜியத்தில் வருகிறார்.

"இங்கே நிற்கிறவர்களில் சிலர் மனித குமாரன் தம்முடைய ராஜ்யத்தில் வருவதைக் காணுமுன், மரணத்தை ருசிபார்ப்பதில்லை என்று, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்". (மத்தேயு 16:28).

தமது வாழ்நாளிலே, அவருக்கு செவி கொடுத்தவர்களிடம் இயேசு தமது இராஜ்ஜியத்தில் வருவதை முன்னுரைத்தார். அவருடைய ராஜ்யம் "வல்லமையோடு வரும்" (மாற்கு 9:1). ஆனால் இயேசு சிலுவையில் மரணமடைவதற்கு முன்பு அது வரவில்லை; ஏனெனில், அக்காலத்திலே அரிமத்தியா ஊரானாகிய யோசேப்பு இன்னும் "தேவனுடைய ராஜ்யத்துக்காகக் காத்திருந்தான்". (லூக். 23:51).

கொலோசெ பட்டணத்து சபை சகோதரர்களுக்கு அப்போஸ்தலர் பவுல் "இருளின் அந்தகாரத்தினின்று நம்மை விடுதலையாக்கி தமது அன்பின் குமாரனுடைய ராஜ்யத்திற்கு உட்படுத்தினவருமாயிருக்கிற பிதாவை ஸ்தோத்தரிக்கிறோம். (குமாரனாகிய) அவருக்குள், அவருடைய இரத்தத்தினாலே, பாவமன்னிப்பாகிய மீட்பு நமக்கு உண்டாயிருக்கிறது" (கொலோ 1:13-14) என்று எழுதி, அவர்களுக்கு நினைப்பூட்டிய காலத்திலேயே இயேசுவின் இராஜ்ஜியம் ஏற்கனவே வந்து வீட்டிருந்தது என்பதை நாம் அறிவோம்.

இராஜ்ஜியம் வல்லமையுடனும், பாவ மன்னிப்பும் இரட்சிப்பும் அளித்திடும் திட்டத்துடனும் எப்போது வந்தது? இயேசு பரலோகத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டதற்கு சிறிது பின்னர் அதற்கு முன்பு, தமது அப்போஸ்தலர்களிடம் தேவனுடைய ராஜ்யத்துக்குரியவைகளைப் பேசி, "பரிசுத்த ஆவி உங்களிடத்தில் வரும் போது நீங்கள் பெலனடைவீர்கள்" என அவருக்காகக் காத்திருக்க கட்டளையிட்டார். (அப். 1:1-3,8). அப்போஸ்தலர் பவுல் சிறிது முன்னர் கொலொசே சபைக்கு அவருடைய நிரூபத்தை எழுதினார்.

## பெந்தெ கொஸ்தே நாள்

இயேசு நமது பிதாவினிடத்திற்கு மேலே சென்றபின், சிலநாட்கள் கழித்து பெந்தெகொஸ்தே நாளிலே அவருடைய இராஜ்ஜியம் நிறுவப் பட்டது. அப்போது"கிறிஸ்துவின் ஆவி" இராஜ்யத்தின் நற்செய்தியை உலகத்திற்கு அறிவிக்கத் தொடங்கும் அதிகாரத்தை அப்போஸ்தலர்களுக்கு அளித்தது. (அப். 2:1) (1 பேதுரு. 1:10-12; யோவான். 15:26-2) அன்றைய நாள் முதல் "இரட்சிக்கப்படுகிறவர்களைக் கர்த்தர் அனுதினமும் சபையிலே சேர்த்துக் கொண்டு வந்தார்." (அப். 2:47). "மீட்பும் பாவமன்னிப்பும்" அடைந்த சகலரும் "இரட்சிக்கப்பட்டவர்கள்". இப்படிப்பட்டவர்கள் அந்நாள் தொடங்கி இந்நாள் வரையிலும் தேவனால் "தமது தேவகுமாரனின் இராஜ்ஜியத்திற்குள்" சேர்க்கப்பட்டு வருகின்றனர்.

அதன் பின், இயேசு வாக்களித்தபடி, ". . . இரண்டு பேராவது மூன்று பேராவது என் நாமத்தினாலே எங்கே கூடியிருக்கிறார்களோ, அங்கே அவர்கள் நடுவிலே இருக்கிறேன்." (மத். 18:20). நமது கர்த்தர் பரலோகத்தில் மட்டும் வீற்றிருக்கவில்லை; மாறாக, அவருடைய நாமத்தை தொழுது கொள்ளும், ஒவ்வொரு இடத்திலுமுள்ள அவருடைய சபையில், அவரை விசுவாசத்துடன் பின்பற்றுவோர்களுடனே இங்கே, இப்போது வாசம் செய்கிறார்.

## 6. எருசலேமில் நியாயந் தீர்க்க கிறிஸ்து வந்தார்.

"எருசலேம் சேனைகளால் சூழப்பட்டிருப்பதை நீங்கள் காணும் போது, அதின் அழிவு சமீபமாயிற்றென்று அறியுங்கள்." (லூக்கா 21:20).

"மின்னல் கிழக்கிலிருந்து தோன்றி மேற்கு வரைக்கும் பிரகாசிக்கிறது போல, மனித குமாரனுடைய வருகையும் இருக்கும்." (மத்தேயு 24:27).

எருசலேம் மக்கள் தேவனை புறக்கணித்தபடியால் அவர்கள் மேல் (கிபி 70) வரவிருந்த நியாயத் தீர்ப்பைப் பற்றி இயேசு அவருடைய அப்போஸ்தலர்களிடம் எச்சரித்தார். பரிசேயர்களையும் கூட முன்னதாகவே எச்சரித்திருந்தார்."இவைகளெல்லாம் சம்பவிக்குமுன்னே இந்த சந்ததி ஒழிந்து போகாதென்று, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்." (மத். 23:33-38).

"கடைசி நாளிலே" (யோ. 12:48) உலகத்தை நியாயந் தீர்க்கும் தமது இறுதி வருகை பற்றி இயேசு குறிப்பிடுகையில் நோவா காலத்தில் (மத். 24:36) தேவன் உலகத்திற்கு அளித்த நியாயத் தீர்ப்புடன் ஒப்பிட்டு இயேசு கூறினார். அந்த இறுதித் தீர்ப்பிலே"ஜீவ புத்தகத்தில் பெயர் காணப்படாத" பிசாசுகளும் மற்றும் பிறரும் "அக்கினிக் கடலிலே" தள்ளப்படுவார்கள். (வெளி. 20:10, 15). மரணமும் பாதாளமும் இனி இருக்காது. (வெளி. 20:14).

"இப்பொழுது இருக்கிற வானங்களும் பூமியும் அந்த வார்த்தையினாலேயே அக்கினிக்கு இரையாக வைக்கப்பட்டு, தேவ பக்தியில்லாதவர்கள் நியாயந் தீர்க்கப்பட்டு அழிந்து போகும் நாள் வரைக்கும் காக்கப்பட்டிருக்கிறது." (2 பேதுரு. 3:7).

தமிழில் : எஸ்.எஸ். ராஜன்.

**தாமதிக்கிறார் என்று சிலர் எண்ணுகிறபடி, கர்த்தர் தமது வாக்குத்தத்தத்தைக் குறித்துத் தாமதமாயிராமல்; ஒருவரும் கெட்டுப்போகாமல் எல்லாரும் மனந்திரும்பவேண்டுமென்று விரும்பி, நம்மேல் நீடிய பொறுமையுள்ளவராயிருக்கிறார்.**

II பேதுரு 3 :9

# கிறிஸ்து சந்தித்த சோதனைகள்

மத்தேயு 4-ம் அதிகாரம் 1 முதல் 11 வசனங்களில் இயேசு சம்பந்தப்பட்ட கீழ்கண்டவற்றை நாம் படிக்கிறோம் : "அப்பொழுது இயேசு பிசாசினால் சோதிக்கப்படுவதற்கு ஆவியானவராலே வனாந்தரத்திற்குக் கொண்டு போகப்பட்டார். அவர் இரவும் பகலும் நாற்பது நாள் உபவாசமாயிருந்த பின்பு, அவருக்குப் பசியுண்டாயிற்று. அப்பொழுது சோதனைக்காரன் அவரிடத்தில் வந்து நீர் தேவனுடைய குமாரனேயானால், இந்தக் கல்லுகள் அப்பங்களாகும்படி சொல்லும் என்றான். அவர் பிரதியுத்தரமாக : மனிதன் அப்பத்தினாலே மாத்திரமல்ல, தேவனுடைய வாயிலிருந்து புறப்படுகிற ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான் என்று எழுதியிருக்கிறதே என்றார். அப்பொழுது பிசாசு அவரைப் பரிசுத்த நகரத்திற்குக் கொண்டு போய், தேவாலயத்து உப்பரிக்கையின் மேல் அவரை நிறுத்தி : நீர் தேவனுடைய குமாரனேயானால் தாழக்குதியும்; ஏனெனில், தம்முடைய தூதர்களுக்கு உம்மைக் குறித்துக் கட்டளையிடுவார்; உமது பாதம் கல்லில் இடறாதபடிக்கு, அவர்கள் உம்மைக் கைகளில் ஏந்திக் கொண்டு போவார்கள் என்பதாய் எழுத்தியிருக்கிறது என்று சொன்னான். அதற்கு இயேசு : உன் தேவனாகிய கர்த்தரைப் பரீட்சைபாராதிருப்பாயாக என்றும் எழுதியிருக்கிறதே என்றார். மறுபடியும், பிசாசு அவரை மிகவும் உயர்ந்த மலையின் மேல் கொண்டு போய், உலகத்தின் சகல ராஜ்யங்களையும் அவைகளின் மகிமையையும் அவருக்குக் காண்பித்து : நீர் சாஷ்டாங்கமாய் விழுந்து, என்னைப்பணிந்து கொண்டால், இவைகளையெல்லாம் உமக்குத் தருவேன் என்று சொன்னான். அப்பொழுது இயேசு : அப்பாலே போ சாத்தானே; உன் தேவனாகிய கர்த்தரைப் பணிந்து கொண்டு, அவர் ஒருவருக்கே ஆராதனை செய்வாயாக என்று எழுதியிருக்கிறதே என்றார். அப்பொழுது பிசாசானவன் அவரை விட்டு விலகிப் போனான். உடனே தேவ தூதர்கள் வந்து, அவருக்குப் பணிவிடை செய்தார்கள்."

இங்கே கிறிஸ்துவுக்கும் பிசாசுக்கும் - நல்லதுக்கும் கெட்டதுக்கும் - ஏற்பட்ட ஒரு நேருக்கு நேர் மோதலைப் பற்றி பார்க்கிறோம். இப்படியாக இவர்கள் சந்திப்பது இதுவே முதலும் கடைசி முறையுமாகும். சந்தேகமில்லை சாத்தானால் கர்த்தர் சோதிக்கப்பட்ட பிற சம்பவங்களும் இருந்தன, குறிப்பாக அவர்

சிலுவையை சந்தித்த நேரம் ஆனால், அந்த சமயங்களில் எல்லாம் கூட, இப்போதைப் போல பிசாசிற்கு அவ்வளவு துணிச்சல் ஏற்பட்டிருக்கவில்லை. இது அவருடைய பலத்தை அல்லது பலவீனத்தை சோதிக்கும் நேரமாக இருந்தது. கிறிஸ்து ஜெயிப்பாரா அல்லது தோற்றுப் போவாரா என்பதைப் பொறுத்து எல்லாம் அமைந்திருந்தது. சந்தேக மின்றி, கிறிஸ்து ஜெயித்தார் என்பதும், பிசாசானவன் மீண்டும் ஒருபோதும் வராதிருக்க, நிரந்தரமாக அவரை விட்டு அகன்று போனான் என்பது நமக்குத் தெரியும். இச்சம்பவத்தி லேயே நிறையை மதிப்புமிக்க பாடங்கள் நிறைந்துள்ளன. சாத்தா னுக்கு விரோதமான நமது போராட்டங்களில் உதவியாக இருக்க, நாம் கற்றுக் கொள்ள வேண்டிய பாடங்கள் இருக் கின்றன. அவற்றில் சிலவற்றை நாம் காண்போம் :

பிசாசால் சோதிக்கப்பட்ட இயேசு ஆவியால் வனாந்தரத் திற்கு கொண்டு போகப்பட்டார் என நாம் படிக்கிறோம். இயேசு பிசாசால் சோதிக்கப்பட பரிசுத்த ஆவியானவர் இவ்வாறு செய்தார் என்பது தெளிவு. பிசாசை அல்லது சாத்தானை அல்லது கெட்டவனை நேருக்கு நேர் சந்திக்கும் நேரம் கிறிஸ்து வுக்கு வந்து விட்டிருந்தது. சோதிக் கப்படுவது என்றால் தவறைச் செய்யத் தூண்டப்படுவது, சில ஆதாயங்களை அல்லது சிற்றின் பங்களைப் பெற்றுக் கொள் ளுவது, அடுத்தவரின் ஆசைக்கு அடிபணிவது என்றெல்லாம் அர்த்தம். வனாந்தரத்திலே, அல்லது யாருக்கும் தெரியாத ஒரு பாலை வனப்பிரதேசத்திலே இது நடைபெறவிருந்தது.

இயேசு வனாந்தரத்திலே இருந்த போது 40 பகல்களும், இரவுகளும் அவர் உபவாசமி ருந்தார். நீங்கள் இதைக் கற்பனை செய்து பார்க்க முடிகிறதா? அவ்வாறு நீண்டகாலம் உபவாச மிருக்க உங்களுக்கும் எனக்கும் எப்படி இருக்கும்? ஒரு வேளை உணவைத் தவற விட்டால் மறுவேளை நாம் எவ்வாறு துடித்துப் போகிறோம்? சரீரப்பூ வமாக இயேசுவை அது பலவீ னப்படுத்தியது உண்மை தான். ஆனால் அதுவே ஆவிக்குரிய விதத்தில் அவர் தாங்கிக் கொள்ளக் கூடியதாக இருந்தது என்பதை தெளிவாகக் காண் கிறோம். உணவு, தண்ணீர் போன்ற அத்தியாவசியமான வற்றை ஒரு குறிப்பிட்ட காலத் திற்கு தூரத்திருக்க மனதில் ஒருவன் வைராக்கியங் கொண் டால், அதுவே அதே சமயத்தில் அவனுக்கு ஆத்ம பலத்தை அளிக் கிறது என்பது தெளிவு. அதுவே தான் இயேசு உபவாசம் இருந்த போதும் ஏற்றபட்டது என்ப தையும், பிசாசை அவர் எதிர்

கொண்டதும் அதே காலத்தில் தான் என்பதையும் காண்கிறோம்.

இயேசு மிகவும் பசியாக இருந்த இப்படிப்பட்ட நேரத்தில் தான் பிசாசானவன் அவரிடத்தில் வந்தான். சோதிப்பவன் அவரிடத்தில் வந்தான் என்பதாக வசனம் கூறுகிறது. அவருக்கு உதவி செய்ய அவன் வரவில்லை. மாறாக, அவரை சோதிக்க, அவரை வீழ்த்திட, அவனுடைய விருப்பத்திற்கு அவரை இணங்க வைக்க அங்கு வந்தான். இயேசு, ஒரு கற்பனையில் உதித்த கதாபாத்திரமாக இல்லாமல், உண்மையான, ஜீவனுள்ள, சரித்திர நாயகனாக வர்ணிக்கப்பட்டிருந்தாலும், பிசாசும் அது போலவே வர்ணிக்கப்பட்டுள்ளான் என்பதை தயவு செய்து கவனியுங்கள் இருவருமே கட்டுக்கதை நாயகங்களோ அல்லது கற்பனை சிருஷ்டிகளோ அல்லாமல், ஜீவனுள்ளவர்களாகவே வர்ணிக்கப்பட்டுள்ளனர். சந்தேகமின்றி இன்றும் அவர்கள் அவ்வாறே தொடர்கின்றனர். சரீரத்துடன் இப்போது வர்கள் வாழவில்லை, ஆனால் ஆவிக்குரிய விதத்தில் இன்றும் வாழ்கின்றனர். இருவருக்குமே எண்ணற்ற தொண்டர்கள் உண்டு.

கிறிஸ்துவை பிசாசானவன் சந்தித்த விதத்தைக் கவனியுங்கள். கர்த்தருக்கு அவன் வைத்த மூன்று சோதனைகளில் இரண்டை அவன் ஆரம்பித்த விதத்தைப் பாருங்கள் : "நீர் தேவனுடைய குமாரனாக இருந்தால். . ." அதாவது, நீர் தேவனுடைய குமாரனாகவும் இருக்கலாம், இல்லாமலும் இருக்கலாம் ஆனால் ஒருவேளை நீர் அவ்வாறு இருந்தால், நான் சொல்லுவதைச் செய்து அதை நிரூபித்துக் காட்டும் என்று அவன் சொல்லுகிறான். கிறிஸ்து தேவனுடைய குமாரன் என்பது பிசாசுக்கு நன்றாகவே தெரியும். என்றாலும் "இருந்தால்" என்ற ஒரு சிறு வார்த்தையைப் போட்டு, அவருடைய தெய்வத்துவத்தை ஒரு கேள்விக்குறியாக்கி, அதை அவர் நிரூபிக்க வேண்டிய சோதனையில் அவரை வீழ்த்தப் பார்க்கிறான். தான் யார் என்று காட்ட கிறிஸ்து இந்த சோதனையில் வீழ்ந்து விடுவார் என சாத்தான் எண்ணுகிறான். ஆனால், கர்த்தர் உண்மையிலேயே எதையும் சாத்தானுக்கு நிரூபித்துக் காட்ட வேண்டியவராக இல்லாததால், அவனுடைய சோதனையில் விழவில்லை.

கிறிஸ்து மிகவும் பசியாயிருந்ததை அறிந்த பிசாசு, மாம்சத்தின் பலவீனத்தை தனது முதல் சோதனைக்கு எடுத்துக் கொண்டான். நீர் தேவனுடைய குமாரன் என்றால் இந்த கல்லுகளை அப்பமாக்கும் என்று அவருக்கு யோசனை கூறினான். அவர் அப்படி எளிதில் செய்திருக்க முடியும். ஆனால் அவ்வாறு அவர் செய்யவில்லை தேவனு

டைய வசனத்தைக் கூறி அவனுக்குப் பதிலளிக்கிறார்: "மனிதன் அப்பத்தினாலே மாத்திரமல்ல, தேவனுடைய வாயிலிருந்து புறப்படுகிற ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான்." சரீரத் தேவைகளை அவர் புரிந்து கொண்டார். என்ற போதிலும், அதைவிட மிக முக்கியமானது ஆவிக்குரிய காரியம் என்பதை அவர் அறிவார்.

பின்னர், பிசாசானவன் பரிசுத்த நகரமாகிய எருசலேமுக்கு அவரைக் கொண்டுச் சென்று, தேவாலயத்தின் உப்பரிகையின் மேல் நிறுத்தி, "நீர் தேவனுடைய குமாரனேயானால் தாழக்குதியும்" என்று கூறி, அவருடைய தூதர்கள் அவரை கீழே விழாமல் தாங்கிக் கொள்வார்கள் என அதற்கான வசனத்தையும் பிசாசு கிறிஸ்துவுக்கு நினைப்பூட்டுகிறான். வசனம் அவ்வாறு கூறுவது உண்மை தான். ஆனால் தூதர்கள் ஏதாவது அல்லது எல்லா சந்தர்ப்பங்களையும் அவ்வாறு செய்வார்கள் என பிசாசு தவறாகக் கணக்குப் போட்டான். சாத்தானுடைய விருப்பத்திற்கு இணங்க அவர் கீழே குதித்திருந்தால் தூதர்கள் நிச்சயமாக அவருடைய உதவிக்கு வந்திருக்க மாட்டார்கள். அல்லது கிறிஸ்துவும் இப்படிப்பட்ட காரியத்திற்காக குதிப்பவர் அல்ல. ஆனால், கிறிஸ்து பதிலுக்கு ஒரு வசனத்தைக் கூறினார்: "உன் தேவனாகிய கர்த்தரை பரீட்சை பாராதிருப்பாயாக."

அடுத்து, ஒரு உயர்ந்த மலையின் உச்சிக்கு கிறிஸ்துவை பிசாசு கொண்டு சென்று, உலகின் ராஜ்யங்கள் அனைத்தையும் அவைகளின் மகிமைகளையும் அவருக்குக் காட்டி, தன்னை சாஷ்டாங்கமாக விழுந்து பணிந்து கொண்டால் அவை அனைத்தையும் அவருக்குக் கொடுப்பதாகக் கூறினான். கிறிஸ்து அவனை அப்பாலே போ சாத்தானே என விரட்டியடித்து, "உன் தேவனாகிய கர்த்தரைப் பணிந்து கொண்டு அவர் ஒருவருக்கே ஆராதனை செய்வாயாக என்று எழுதியிருக்கிறதே" என்றார். கிறிஸ்து உலகின் ராஜ்யங்களின் அனைத்தின் பேரிலும் ஏற்கனவே அதிகாரம் படைத்தவர் என்பதையும், நிச்சயமாக தன்னை வணங்கி அதிகாரத்தை அதிகப்படுத்திக் கொள்ள வேண்டிய அவசியம் அவருக்கில்லை என்பதையும் சாத்தான் அறிந்திருக்க வேண்டும்.

இந்த சோதனைகள் அனைத்திலும் தோற்றுப்போன பிசாசு, கர்த்தரை கவிழ்க்க வேறு வழியில்லை என்பதை உணர்ந்தவனாக அவ்விடத்தை விட்டு அகன்று போனான். இவ்வேளையில், வான தூதர்கள் இறங்கி வந்து கிறிஸ்துவுக்கு பணிவிடை செய்தனர். கிறிஸ்து சாத்தானை வென்றார் என்பதும், அவருடைய

தேவைகளைக் கவனித்துக் கொள்ள பிதா தூதர்களை அனுப்பி தமது அங்கீகாரத்தைக் காட்டினார் என்பதும் தெளிவு.

பிசாசுடன் நமக்குள்ள போராட்டங்களில் நமக்கு உதவியாக இருக்கும் சில குறிப்புகளை நாம் இந்த சமயத்தில் கவனிப்போம் :

முதலாவதாக, பிசாசு அல்லது சாத்தான் இன்று வாழ்கிறான்; தொடர்ந்து மக்களை சோதிக்கவும் செய்கிறான் என்பதை உணருங்கள். பேதுரு நம்மை எச்சரிப்பதைப் பாருங்கள் : "தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருங்கள், விழித்திருங்கள்; ஏனெனில், உங்கள் எதிராளியாகிய பிசாசானவன் கெர்ச்சிக்கிற சிங்கம் போல எவனை விழுங்கலாமோ என்று வகை தேடிச் சுற்றித் திரிகிறான்." (1 பேதுரு 5:8) பிசாசு அல்லது சாத்தான், நாம் அறிவது போல, மாம்ச உருவில் உங்களிடமோ என்னிடமோ வருவதில்லை. என்றாலும், பல்வேறு வழிகளில் அவன் வருவான். சோதிக்க, ஏமாற்ற, தவறான வழியில் நடத்த அவன் வருகிறான். அவனைப்பற்றியும் அவனுடைய வழிகளைப் பற்றியும் எச்சரிக்கையாக இருப்போம்.

இரண்டாவதாக, எப்போதுமே நமது பலவீனமான நிலையை குறி வைத்துக் கொண்டு சாத்தான் வருகிறான். உடலாலும், உள்ளத்தாலும் நாம் பலவீனமாக இருக்கும் சந்தர்ப்பத்தை அவன் பயன் படுத்துகிறான் அப்போதுதான் நம்மை மேற்கொண்டு, தனது காரியத்திற்கு நம்மை அடிமையாக்கிக் கொள்ளலாம் என்று அவன் நம்புகிறான்.

மூன்றாவதாக, நமது முயற்சிகளாலோ, வல்லமைகளாலோ சாத்தானை நாம் மேற்கொள்ளுவது இயலாது. நாம் நீதிமான்களாக இருப்பின், கர்த்தரின் உதவியை நாடுவோம். அவரோடும், அவருடைய வசனத்தோடும் இணைந்து நாம் சாத்தானை விரட்டியடிக்கலாம்.

நான்காவதாக, சாத்தான் நமக்கு ஒருபோதும் நன்மைகளைத் தருவதில்லை; நமது கர்த்தரோ நமக்கு எண்ணற்ற எவ்வளவோ நன்மைகளை தர முடியும் என்பதை நினைவில் வைத்துக் கொள்வோம். மாம்சத்திற்குரிய, இவ்வுலகத்திற்குரிய பொருட்களால் சாத்தான் நம்மை சோதிக்கக்கூடும். ஆனால் அவை தவறானவை, நீடிக்காது இறுதியில் அழிந்து போகும். (1 யோவான். 2:15-17) கிறிஸ்து நமக்கு அளிப்பவை அனைத்தும் சரியானவை, நல்லவை, நித்தியமானவை. கிறிஸ்து நம்மை அழித்துப்போட முயற்சிப்பதில்லை, ஆனால் அவர் இவ்வுலகத்திலும் நம்மை காத்து, நமக்கு நித்திய ஜீவனை அளிக்கும் நம்பிக்கை தருகிறார்.

ஐந்தாவதாக, சாத்தானை நாம் உதறித் தள்ளினால் நம்மை விட்டு அவன் ஓடிப் போவான். யாக்கோபு கூறுகிறார் : "ஆகையால், தேவனுக்குக் கீழ்ப்படிந்திருங்கள்; பிசாசுக்கு எதிர்த்து நில்லுங்கள், அப்பொழுது அவன் உங்களை விட்டு ஓடிப்போவான்'' (யாக்கோபு. 4:7)

என் நண்பரே! நீங்கள் ஒரு கிறிஸ்தவராக இல்லாத பட்சத்தில், நீங்கள் சாத்தானுடைய தயவில் இருக்கிறீர்கள். அவன் உங்களை கிடிக்கிப்பிடி போட்டு வைத்துக் கொண்டு இறுதியில் உங்களை அழித்துப் போடுவதே அவனுடைய நோக்கம் இப்படி நடக்க நீங்கள் அனுமதிக்கப் போகிறீர்களா? இல்லையென்றால், அதற்கு ஒரு வழி - ஒரே ஒரு வழிதான் - உண்டு என்பது உங்களுக்குத் தெரியுமா?

நீங்கள் தேவனை விசுவாசித்தால்; கிறிஸ்துவை தேவனுடைய குமாரன் என்று விசுவாசித்தால்; உங்கள் பாவங்களிலிருந்து நீங்கள் மனந்திரும்பினால்; கிறிஸ்துவை தேவனுடைய குமாரன் என அறிக்கை செய்தால்; உங்கள் பாவங்கள் மன்னிக்கப்பட, தண்ணீரில் முழுகி திருமுழுக்குப் பெற்றால்; கர்த்தர் உங்களை இரட்சித்து தமது சபையில் உங்களை சேர்த்துக் கொள்வார். அப்படியாயின், நீங்கள் சாத்தானிலிருந்து விடுபடுவதோடு, கிறிஸ்துவுக்கு தொடர்ந்து விசுவாசமுள்ளவராக செயல்படும் போது, அவர் உங்களோடு இருப்பார். உங்களை சாத்தானுடைய பிடியில் சிக்க விட மாட்டார். கீழ்ப்படிவதில் எங்கள் உதவி தேவையா? நாங்கள் எப்போதும் கர்த்திருக்கிறோம்.

J.C. சோட்

நீ படப்போகிற பாடுகளைக் குறித்து எவ்வளவும் பயப்படாதே, இதோ, நீங்கள் சோதிக்கப்படும் பொருட்டாகப் பிசாசானவன் உங்களில் சிலரைக் காவலில் போடுவான் பத்து நாள் உபத்திரவப்படுவீர்கள். ஆகிலும் மரண பரியந்தம் உண்மையாயிரு, அப்பொழுது ஜீவ கிரீடத்தை உனக்குத் தருவேன்.

வெளி. 2 : 10

யெகோவா சாட்சிகள் - 4

# கிறிஸ்துவின் தெய்வீகத்தை மறுதலிக்கும் கூட்டத்தார்

இயேசு கிறிஸ்து உலகத்தில் வாழ்ந்தபோது, தாம் தேவனுடைய குமாரன் என்பதையும், தமது இயல்பு தெய்வீகமானது என்பதையும் நிரூபிக்க பல வழிகளிலும் முயற்சித்தார். தம்மை நிரூபிக்க அவர் கேட்ட கேள்விகள், 'நீங்கள் என்னை யார் என்று சொல்லுகிறீர்கள்?' என்பதும் (மத். 16:15) 'கிறிஸ்துவைக் குறித்து நீங்கள் என்ன நினைக்கிறீர்கள், அவர் யாருடைய குமாரன்' என்பதுமாகும். (மத். 22:42).

அன்றும் இன்றும் அவரைச் சரியாக புரிந்து கொள்ளக் கூடியவர்கள் மிகச் சிலர் மாத்திரமே என்பதை நாம் அறிகிறோம். சிலர் அவரை மாமனிதர் என்றும், அவரைத் தீர்க்கதரிசி என்றும், அடையாள அற்புதங்களைச் செய்கிறவர் என்றும் கண்டனர். மேலும் அவர் சில வியாதிகளை குணமாக்குகிறவர் மட்டுமே என்று அன்றும் இன்றும் காண்கின்றனர். ஏறத்தாழ அனைத்து நாமகரணக் கூட்டங்களும் 'பிதா, குமாரன், பரிசுத்த ஆவி மூவரும் ஒரே நபர்தான். எனவே பிதாவாகிய தேவனே குமாரனாகிய கிறிஸ்துவாக வந்தார்' என்பார். வேதத்தின்படி இது முற்றிலும் தவறானது.

உதாரணமாக ஆதி, 1:26-ல், 'நமது சாயலாகவும், நமது ரூபத்தின்படியேயும் மனுஷனை உண்டாக்குவோமாக' . . . என்பதிலிருந்து ஒன்றுக்கு மேற்பட்ட நபர்களைக் காண்கிறோம். மத், 3 :16-17-ல் குமாரனாகிய கிறிஸ்து ஞானஸ்நானம் பெறுவதையும், வானத்திலிருந்து பிதாவாகிய தேவன் பேசுவதையும், பரிசுத்த ஆவியானவர் ரூபங்கொண்டு புறாவைப் போல் இறங்குவதையும் நபர்களின் தனித்தன்மையை நாம் இங்கு அறிகிறோம். மேலும் ஸ்தேவான் கல்லெறியுண்டு, மரிக்குந்தறுவாயில், 'தேவனுடைய மகிமையை ... தேவனுடைய வலது பாரிசத்தில் இயேசுவானவர் நிற்கிறதையும் காண்பதாகக் கூறுகிறார் (அப். 7 : 55)'பரலோகத்திலே சாட்சியிடுகிறவர்கள் மூவர். பிதா, வார்த்தை, பரிசுத்த ஆவி என்பவர்களே, இம்மூவரும் ஒன்றாக இருக்கிறார்கள்' (1 யோவான் 5:7) அதாவது மூவரும் கருத்து ஒருமித்து இருக்கிறார்கள் என்று யோவான் எழுதுகிறார் (1யோவான் 5 : 7) இப்படி ஏராளமான வசனங்களில் பிதா, குமாரன்,

பரிசுத்த ஆவி ஆகிய மூவரும் மூன்று வித்தியாசப்பட்ட நபர்கள் என்பதை படம் பிடித்து காட்டப்படுகிறது. இருந்தும், அநேகர் 'மூவரும் ஒருவர் தான்' என சாதிப்பது வேதனைக்குரியது.

பல நாமகரணக் கூட்டங்களும் இப்படி போதிக்கும்போது, யெகோவா சாட்சியினரும் பிதாவாகிய தேவன் மட்டுமே தெய்வீகம் நிறைந்த யெகோவா கிறிஸ்து தேவனுடைய குமாரன் மட்டுமே; அதாவது சிருஷ்டிக்கப்பட்ட ஒருவர் என்று தேவ தூஷணம் பேசித் திரிகின்றனர். வேதம் இவர்களின் இக்கூற்றை முற்றிலும் பொய்யாக்கு கிறது. எனவே மேற்குறித்த இரண்டு வித கோட்பாடுகளுமே தங்க ளுக்குள் முரண்பட்டிருப்பதோடு, வேத வாக்கியங்களுக்கும் அப்பாற்பட்டு காணப்படுகிறது. ஆதலால் அருமை வாசகரே, தீர்மா னிப்பது நமது கையிலிருக்கிறது. கிறிஸ்து தரிசுப்பட்டணத்தானாகிய சவுலுக்குத் (பவுலுக்கு) தரிசனமானபோது அவர் இரண்டு கேள்வி களைக் கேட்டு, தெளிவடைந்த பின்னரே தீர்மானம் எடுத்தார். அவர் கேட்ட முதல் கேள்வி, 'ஆண்டவரே நீர் யார்?' அதற்கு ஆண்டவர் உரைத்த பதில், 'நீ துன்பப்படுத்துகிற இயேசு நானே', அப்பொழுது பவுல் கேட்ட இரண்டாவது கேள்வி, 'ஆண்டவரே நான் என்ன செய்ய சித்தமாயிருக்கிறீர்'. நமது தீர்மானமும் முதலில் கிறிஸ்து யார் என்று அறிந்து கொண்ட பின்பே அமையட்டும்.

சார்லஸ் டி, ரஸ்ஸலின் வேதத்திற்குப் புறம்பான காவல் கோபுர வெளியீடுகளை உலகமெங்கும் சுமார் ஒரு கோடிக்கு மேற்பட்டோர் மாதந்தோறும் படிக்கின்றனர். அதாவது சுமார் ஒரு கோடிக்கு மேற்பட் டோருக்கு இவர்களின் விஷம் புகட்டப்படுகிறது. அந்த விஷத்தனமான போதனைகளில் ஒன்றுதான், இயேசு தேவனால் சிருஷ்டிக்கப்பட்டவர், அவர் அநித்தியமானவர், ஆதலால் தேவனுக்கு சமமானவர் அல்ல என்பதுமாகும்.

## சர்ச்சைக்குரிய இவர்களின் கூற்றுகளுக்கு பதில் காண்போம்.

1. இயேசு கிறிஸ்து சிருஷ்டிக்கப்பட்டவரா? அல்லது சர்வ வல்லமையுள்ள சிருஷ்டிக் கர்த்தாவா?
2. இயேசு கிறிஸ்து தேவர்களில் ஒருவரா? அல்லது யெகோவா என்று வேதத்தில் எங்காகிலும் குறிக்கப்பட்டுள்ளாரா?
3. அவர் தேவனுடைய குமாரன் மட்டும்தானா? அல்லது குமாரனாகிய தேவனா?

4. இயேசு வல்லமையுள்ள தேவன் மட்டுந்தானா? அல்லது சர்வ வல்லமை உள்ள தேவனா?

5. இயேசு கிறிஸ்து தெய்வீகம் குறைந்தவரா?

6. அவர் தேவனுக்கு சமமானவரா? இல்லையா?

மேற்குறித்தவைகளில், யெகோவா சாட்சியினரின் கூற்றுகள் உண்மையாயின் வேதம் அதை நிரூபிக்கட்டும், அவர்கள் வேதத்தின்படி பொய்யாயிருப்பின், தங்களின் (சாத்தானுடைய) போதனையை உதறித் தள்ளிவிட்டு ஜீவன் உள்ள தேவனுடைய குமாரனும் இரட்சகருமாகிய கிறிஸ்துவினிடத்திலும், அவருடைய ஒரே உண்மை சபையிலும் வரத் தயாரா?

Bro. E.A. ஆறுமுகம்.
திண்டுக்கல்.

## பெற்றோரின் கடமை

நீ உன் மகனைத் தண்டியாதிருந்தால் அவனை நேசிக்கவில்லை. நீ அவனை நேசித்தால் அவனைத் தண்டித்துத் திருந்துவாய்.

நீதி. 13 :24

உன் மகன் இளவயதுள்ளவனாயிருக்கும் போது அவனுக்கு ஒழுங்கைக் கற்றுக் கொடு. நீ அப்படிச் செய்யவில்லையென்றால், அவன் அழிந்து போவதற்குக் காரணமாயிருப்பாய்.

நீதி. 19: 18

பிள்ளையைத் தண்டியாமல் விடாதே. அவனைப் பிரம்பினால் அடித்தால் சாகமாட்டான். நீ பிரம்பினால் அவனை அடித்தால் பாதளத்திற்கு அவன் உயிரைத் தப்புவிப்பாய்.

நீதி. 23 : 13 - 14

# எந்த வழி?

## மூன்று வழிகளில் மக்கள் கிறிஸ்துவுக்குப் பதிலளிக்கின்றனர்.

1. அவரை ஏற்றுக் கொள்ளுவது
2. அவரை தள்ளி விடுவது
3. ஒரு முடிவும் எடுப்பதில்லை

"மரித்தோரின் உயிர்த்தெழுதலைக் குறித்து அவர்கள் கேட்ட பொழுது, சிலர் இகழ்ந்தார்கள். சிலர் நீ சொல்லுகிறதை இன்னொரு வேளை கேட்போம் என்றார்கள் . . . . சிலர் அவனைப் பற்றிக் கொண்டு, விசுவாசிகளானார்கள் . . ." (அப். 17:32-34).

## இரண்டு வித மக்களை கிறிஸ்து பார்க்கிறார்.

1. அவரை ஏற்றுக் கொள்ளுபவர்கள்

அவரை எதிர்ப்பவர்கள் (ஒரு முடிவும் எடுக்காதவர்கள் உட்பட)

"குமாரனிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் நித்திய ஜீவனை உடையவனாயிருக்கிறான், குமாரனை விசுவாசியாதவனோ ஜீவனைக் காண்பதில்லை . . ." (யோவான் 3 : 36).

"என்னோடே இராதவன் எனக்கு விரோதியாயிருக்கிறான் . . ." (மத். 12 : 30).

## ஒரு பிரிவு மக்களை கிறிஸ்து இரட்சிக்கிறார்.

1. அவரை விசுவாசித்து அவருக்குக் கீழ்ப்படிகிறவர்கள்.

". . . . விசுவாசிக்கிறவன் எவனோ அவனுக்கு இரட்சிப்பு உண்டாவதற்கு அது தேவ பெலனாயிருக்கிறது". (ரோமர் 1 : 16).

". . . . . தமக்குக் கீழ்படிகிற யாவரும் நித்திய இரட்சிப்பை அடைவதற்குக் காரணராகி," (எபிரேயர் 5 : 9).

## கிறிஸ்துவை அறிவிக்கும் மூன்று வழிகள்

1. அவரைப் பற்றி பிறரிடம் எடுத்துச் சொல்லுவது

2. அவருக்கு விரோதமாகப் பேசுவது

3. அவருடைய செய்தியை புரட்டிப் பேசுவது

"அப்பொழுது பிலிப்பென்பவன் . . . அங்குள்ளவர்களுக்குக் கிறிஸ்துவைக் குறித்துப் பிரசங்கித்தான்" (அப். 8 :5).

". . . நீயும் கலிலேயனாகிய இயேசுவோடே கூட இருந்தாய் . . . நீ சொல்லுகிறது எனக்குத் தெரியாது என்று எல்லாருக்கும் முன்பாக மறுதலித்தான்." (மத். 26 : 69 - 70).

". . . சிலர் உங்களைக் கலகப்படுத்தி, கிறிஸ்துவினுடைய சுவிசேஷத்தைப் புரட்ட மனதாயிருக்கிறார்களேயல்லாமல் வேறல்ல". (கலா. 1 : 7).

## இரட்சிப்படைய இரு தேவைகள்

1. மக்களை தேவன் தமது பக்கமாக இழுத்துக் கொள்ளுகிறார்.

2. மக்கள் தேவனை அக்கறையுடன் தேட வேண்டும்.

"என்னை அனுப்பின பிதா ஒருவனை இழுத்துக் கொள்ளாவிட்டால் அவன் என்னிடத்தில் வரமாட்டான் . . ."( யோவான் 6 : 44, 12 : 32).

". . . . தேவனிடத்தில் சேருகிறவன் அவர் உண்டென்றும், அவர் தம்மைத் தேடுகிறவர்களுக்குப் பலன் அளிக்கிறவர் என்றும் விசுவாசிக்க வேண்டும்." (எபி. 11:6, மத். 7 : 7 - 8).

## இரட்சிப்புக்கு ஒரே வழி

1. இயேசு கிறிஸ்துவின் மூலமாக

" . . . நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன்; என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்". (யோவான் 14 : 6, அப். 4 : 12) கிறிஸ்துவின் செய்தியைக் கேட்காதவர்களுக்கு இரட்சிப்பு இல்லை. (ரோ. 10 : 14), கிறிஸ்துவுக்குள், தேவனிடத்தில் வராதவர்களுக்கு இரட்சிப்பு இல்லை (யோ. 5 :40, அப். 2 : 36 - 42).

EZSR

# கிறிஸ்துவின் சபை ஒரு பிரிவினைக் கூட்டமா?

புதிய ஏற்பாட்டில் விவரிக்கப்படும் சபையைப் பற்றி நாம் படிக்கும்போது, அது ஒரு பிரிவினை சபையோ, குழுவோ, அல்லது மதக்கட்சியோ அல்ல என்னும் உண்மை நமக்கு தெள்ளத் தெளிவாகத் தெரிகிறது. கிறிஸ்துவின் நற்செய்திக்குக் கீழ்ப்படிந்து, கிறிஸ்துவின் வழியில் நடக்கும் "அழைக்கப்பட்டவர்கள்" அல்லது இரட்சிக்கப்பட்ட மக்களே இந்த சபை. கர்த்தருடைய வசனம் போதிக்கப்பட்டு, அந்த நற்செய்தியை மக்கள் விசுவாசித்து, அதற்குக் கீழ்ப்படியும் போதெல்லாம் பிரிவினையற்ற கிறிஸ்துவின் சபையை நீங்கள் காணலாம்! "விதை தேவனுடைய வசனம்" என இயேசு கூறினார். (லூக்கா. 8:11). இன்றைய நவீன உலகில் "பிரிவினை சபை" என்ற வார்த்தை, வேதாகம வார்த்தையான "சபை"யுடன் குழப்பப்படுகிறது. இது மிகவும் துர்அதிர்ஷ்டமான காரியம். ஏனெனில், புதிய ஏற்பாட்டில் விவரிக்கப்படும் சபை, "பிரிவினையற்ற சபை"யாக இருக்க வேண்டும். கிறிஸ்துவைத் தவிர வேறு தலைவர் அதற்கு இல்லை; இவ்வுலகில் அதற்கு தலைமையகம் எதுவும் கிடையாது; கிறிஸ்துவின் சட்டங்களைத் தவிர வேறு எந்த மனிதச்சட்டங்களும் இந்த சபையில் ஒரு மனிதனை இணைக்காது; புதிய ஏற்பாட்டில் காணப்படும் பெயர்களைத் தவிர வேறு பெயர் இதற்கு இல்லை. சுவிசேஷத்தில் புதிய விளக்கப்பட்ட எளிய முறையே அல்லாது வேறு நிறுவன அமைப்புகள் எதுவும் இந்த சபைக்குக் கிடையாது; தன்னைப் பின்பற்றுவோர் அனைவரும் கிறிஸ்தவர்கள் என்று மட்டுமே அழைக்கப்பட வேண்டுமென கிறிஸ்து விரும்புகிறார், வேறு எந்தப் பெயராலும் அல்ல. மாறுபட்ட போட்டிப் பெயர்களும், மதச் சட்ட நூல்களும், நிறுவன அமைப்புகளும், மனிதனை மதத்தலைவனாக ஏற்றுக் கொள்ளுவதும், பிரிவினைகளும், கட்சிகளும், குழுக்களும் கிறிஸ்துவுக்கு ஏற்புடையவையல்ல. கிறிஸ்துவின் சபை பிரிவினையற்றது. அது கிறிஸ்துவின் சரீரம், கிறிஸ்துவின் அரசு, கிறிஸ்துவின் மணவாட்டி. பெந்தெகொஸ்தே நாளிலே கிறிஸ்துவின் நற்செய்திக்கு மக்கள் எவ்வாறு கீழ்ப்படிந்தனரோ அவ்வாறு கீழ்ப்படியும்போது, கர்த்தர் அவர்களை சபையில் சேர்க்கிறார். (அப். 2 : 47). கிறிஸ்துவுக்கு உண்மையாக நடக்கும் உலகிலுள்ள சகல கிறிஸ்தவர்களும், கிறிஸ்துவின் நாமத்தினாலேயும், அவர்களுடைய சகோதர அன்பினாலும் ஒருவருக்கொருவர் இணைக்கப்பட்டுள்ளனர்.

**M. Norvel Young**

**நார்வல் யங்**

# HEAR THE VOICE OF TRUTH ON RADIO SRI LANKA

| | | |
|---|---|---|
| **HINDI** | : | Sunday 8:45 P.M. - 9.00 P.M. Tuesdays, Thursdays, and Fridays, 9.00 P.M. - 9.15 P.M. Speaker, Sunny David, Box 3815, New Delhi - 110049. |
| **ENGLISH** | : | Mondays, 9.00 P.M. - 9.15 P.M. Fridays, 7.45 P.M. - 8.00 P.M. Speaker, J.C. Choate, Box 3815, New Delhi - 110049. |
| **TELUGU** | : | Sundays, Tuesdays, Thursdays, Fridays, and Saturdays, 2.15 P.M. 2.30 P.M. Speaker, Joshua Gootam, Box 80, Kakinada - 533 001. |
| **TAMIL** | : | Sundays, Thursdays, 6.45 P.M. - 7.00 P.M. Tuesdays, 5.30 P.M. 5.45 P.M. Speaker, P.R. Swamy, Box 8405, Banagalore - 560 084. |
| **MALAYALAM** | : | Tuesdays and Fridays, 3.45 P.M. - 4.00 P.M. Speaker, P.K. Varghese, Sunny Meads Lane, Behind Sanskrit College, Trivandrum - 695 034. |
| **KANNADA** | : | Sundays, 1.45 P.M. 2.00 P.M. - 2.00 P.M. Speaker, Robert Rathnakar, Box 448, Banagalore - 6600 004. |

Please write to these addresses for Bible correspondence course, magazines, and other Christian literature in your language.

ALL OF THESE PROGRAMMES ARE SPONSORED BY THE CHURCH OF CHRIST.

Licenced to Post without Prepayment of Postage TN/ERD/W/0 PP/5
Posted ar Erode HPO on 20, MAY 1995
மே 1995, THIRUMARAI AASAAN Regd. No. TN/ERD/49

## -:அஞ்சல் வழி வேதாகமக் கல்வி :-

பரிசுத்த வேதாகமத்தை முறையாகக் கற்றுக் கொள்ள விரும்புவோருக்கு ஓர் இனிய செய்தி. ஆம், மிகத் தேர்ந்த முறையில் ஒழுங்கு செய்யப்பட்ட, "அஞ்சல் வழி வேதாகமப் பயிற்சியை" ஆரம்பிக்க கர்த்தர் கிருபை புரிந்துள்ளார்.

இது, 15 பாடங்களைக் கொண்ட இலவசப் பயிற்சி. இப்பயிற்சியை வெற்றிகரமாக முடிப்பவர்களுக்கு, "சான்றிதழ்" வழங்கப்படும்.

பயிற்சியில் சேர விரும்புவோர் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி

இயக்குநர்
அஞ்சல் வழி வேதாகமக் கல்வி
த.பெ.எண். 27
காங்கயம் - 638 701.

Published by Church of Christ Kangayam and
Printed at Jeeva Sakthi Press, Erode. Editor E.Z.S. Rajanayagam

PRINTED MATTER BOOK - POST

If undelivered Please return to
The Editor
THIRUMARAI AASAAN
POST BOX No. 27, KANGAYAM - 638 701